# கும்பாபிஷேக மலர்

## 2011



## சிறுப்பிட்டி மத்தி வல்லையப்புலம்

## கருணாகடாக்ஷி

## ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்

உ

சிவமயம்

மனோன்மணி அம்பாள் துணை

## சிறுப்பிட்டி மத்தி - வல்லையப்புலம்
## கருணாகடாக்ஷி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய

# கும்பாபிஷேக மலர்



வெளியீடு :

**கருணாகடாக்ஷி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபை.**

***கர வருடம் ஐப்பசி மாதம் 2ம் நாள்***

***19.10.2011***

உ

## தேவஸ்தான குரு, பிரதிஷ்டா பிரதமகுரு
## பிரம்மஸ்ரீ. ச. ஜெயந்திநாதக் குருக்களின்
# ஆசியுரை

எல்லாம் வல்ல உலகநாயகியும் அறுவகைச் சமயவழிபாட்டிலும் மிகக் கடினமானதும் விஸ்தாரமான பக்ததிகளை உள்வாங்கியதும் கலியுகத்தில் வெகு விரைவில் பலனளிப்பதும் ஆகிய "சாக்தம்" என்று சொல்லப்படும் சக்தி வழிபாட்டின் அன்னையாகிய கருணாகடாக்ஷியாம் மனோன்மணி அம்பாளுக்கு பெரும் பொருட் செலவில் மிகவும் உத்தமமான நவகுண்ட பக்ஷ கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடந்தேறியுள்ளது. ஒவ்வொரு ஆலயங்களிலும் ஏதாவது ஒரு சிறப்பான அம்சம் இருக்கும். இவ்வாலயத்தில் எழுந்தருளி அம்பாளாக வீற்றிருக்கும் மனோன்மணி தாயானவள் அமைந்த அமைப்பே தனியழகு. சர்வ அலங்காரங்களுடன் எழுந்தருளி வரும் போது மாலைகளும் சேர்ந்தே அழகூட்டுகின்றது. ஆனால் சாதாரணமாக நாம் அபிஷேகம் செய்யும் போது இவ்வம்பாள் முழுவதும் தங்கத் திருமேனியால் ஜொலிப்பதைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும். அதுதான் தெய்வீகம் என்று சொல்வார்கள். விக்கிரகம் செய்யும் ஆச்சாரிமார் லோகங்களை ஒருவித விகித பிரமாணப்படி கலந்து தான் உருக்குவார்கள். அப்படி உருக்கி வார்த்த விக்கிரகம் பூரணப்படுத்தப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படும். அந்தக் கலப்புமுறை சரியாக இருந்தாலும் விக்கிரகத்தில் வெளிப்படும் தங்கநிறம் தான் தெய்வீகம் என்பது இந்த அம்பாளைப் பார்த்தால் தங்கநிறம் புன்சிரிப்புடன் கூடிய முகம் இவைதான் இந்த அம்பாளின் அற்புத அமைப்பு. இவ்வளவு சிறப்பும் பொருந்திய அம்பாளின் கும்பாபிஷேகத்தைச் செய்வித்து வைத்த மேற்படி கோயில் பரிபாலன சபையினர்க்கும், பாரிய திருப்பணிக்கு சகல வழிகளில் உதவியோர்க்கும், சிரமாதானங்கள் செய்தோர், கோயில் கட்டுமானம், வர்ணவேலை, யாகசாலை அமைத்தோர், மரவேலை சகலவேலைகளும் செய்தோருக்கும், தொண்டர்களுக்கும், பெண்களுக்கும், எல்லா அம்பிகை பக்தர்களுக்கும் மனோன்மணி அம்பிகையின் அருள் என்றென்றும் கிடைக்க வேண்டும் என்று அம்பாளைத் துதிக்கிறேன்.

சர்வ மங்களம் உண்டாகட்டும்.

### நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர்
### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்
## ஆசியுரை

சக்தியின்றி சிவமில்லை. சக்தி வழிபாட்டுத்தலம் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொன்று காணப்பட வேண்டும். அந்தவகையில் வாழை, வெங்காயம், நெல்வயல்கள், கற்றோர்கள், பண்பாளர்கள் வாழ்கின்ற சிறுப்பிட்டிப்பதியின் மத்தியில் எல்லாம் வல்ல அன்னை மனோன்மணி அம்பாள் பன்னெடுங்காலம் அருள்பாலித்து வருகின்றாள். பழைய ஆலயத்தை புனருத்தாரணம் செய்து மஹா கும்பாபிஷேகம் காண்பது ஊருக்குச் சிறப்பானதாகும். திருப்பணிகளை மேற்கொண்ட பரிபாலன சபையினர், நிதி உதவிய அம்பிகை அடியார்கள் யாவர்க்கும் மனோன்மணி அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

---

### சர்வபோதகாச்சார்யர் பிரம்மஸ்ரீ. ஆ. சந்திரசேகரக் குருக்கள் அவர்களின்
## ஆசியுரை

"நமோ தேவ்யை மஹா தேவ்யை
சிவாயை சததம் நமஹ"

அன்னை பராசக்தி, சிவகாமி, இராஜேஸ்வரி, கருணாகடாட்சி என்னும் பல நாமங்களால் மனோன்மணி ஸ்வரூபமாக வல்லையப்புலம் என்னும் திவ்ய ஷேத்திரத்தில் அருளாட்சி செய்து வரும் சர்வலோக நாயகிக்கு பெருஞ் சாந்தியென்னும் புனராவர்த்தன சம்புரோஷண அஷ்டபந்தன நவகுண்டபஷமஹா கும்பாபிஷேக வைபவம் நடைபெறுகிறது. அன்னையின் அற்புதங்கள் அளப்பரிது. இயற்கையாலும் மனிதராலும் ஏற்பட்ட நெருக்கடிகளிலிருந்து மக்களைக் காத்து கம்பீரமாக இருந்து அருளாட்சி செய்து வருவது இந்த மக்களின் தவப்பேறு.

கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி என்பது பிராயச்சித்தம். இது மனம் வாக்கு காயங்களினால் அறியாது செய்து குற்றங்களை நீக்குவது. பெறற்கரிய மானுடம்பைத் தந்தருளிய எம்பிராட்டியை சிவாகம முறைப்படி சென்று வழிபாடு செய்தல் வேண்டும். இவ்வாறு வழிபடும் பொழுது புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் ஏற்படும் பிழைகளை மகோற்சவ தரிசனத்தால் நீக்கலாம். உற்சவ காலத்தில் ஏற்பட்ட பிழைகளைக் கும்பாபிஷேக தரிசனத்தில் நீக்கலாம். ஆகவே வேறு எந்த வகையாலும் தீர்க்க முடியாத சிவ அபராதம் தீர்க்கப்படுகின்றமையால் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி என்று சைவ நூலுணர்ந்த பெரியோர்கள் கூறுகின்றனர்.

மனோன்மணிக்குப் பெருஞ்சாந்தி வைபவம் நடைபெற திருப்பணிகள் ஆரம்பித்த நேரத்தில் மிகச் சொற்ப பணத்துடன் ஆரம்பிக்கப்பெற்றது. கும்பாபிஷேகம் நடப்பதில் பலருக்கும் சந்தேகங்களும் கூட உண்டாகின. அம்பாள் திருவருள் எல்லோரது

உள்ளத்திலும் திருப்பணிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டும். திருக்கோயில் அழகான சித்திர வேலைப்பாடுகளுடன் அமைய வேண்டும். அதில் அன்னையர் பெருங்காட்சியைக் கண்டுகளிக்க வேண்டும் என்ற உந்து சக்தியை உண்டாக்கினாள். அதன் பயனாக உள்ளூரிலும் அன்னிய தேசத்தில் வாழும் அன்னையின் அடியார்களும் அள்ளி வழங்கிய பல லட்சம் ரூபா செலவில் திரிதள சுந்தர விமான ஸ்தூபியும் சக்தியின் பலவித பேதங்கள் அமைந்த கதைகளும் கண்கவர புதிதாக அமைக்கப்பட்ட உன்னத மஹா நாசியுடைய வசந்த மண்டபமும், மணிக்கோபுரமும் மிளிர மகாகும்பாபிஷேகத்தைக் காண பெரும் புண்ணியஞ் செய்துள்ளார்கள்.

அந்தரங்க சுத்தியுடன் மனம், வாக்கு, காயங்களால் இந்தப் பதி புண்ணியத்தில் உழைத்த மக்களுக்கு மனோன்மணி அம்பிகையின் அருளால் சகல சௌபாக்கியங்களும் உண்டாக ஆசி நல்கி இறைவியை இறைஞ்சி நிற்கின்றேன்.

சர்வே ஜனாஹ சுகினோ பவந்து

## வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின்

# வாழ்த்துரை

வலிகாமம் கிழக்கின், ஊர்கள் ஒவ்வொன்றுமே பெரிய நிலப்பரப்பைக் கொண்டு காணப்படுகின்றன. சைவத்தமிழ்ப் பண்பாட்டை மட்டுமே போற்றிக் கடைப்பிடிக்கின்ற மக்கள் வாழும் இடம் சிறுப்பிட்டிக் கிராமம் ஆகும். அங்கு மத்தியில் அருட்பெரும் சக்தியாக, மிகப்பழைய வரலாற்றுப் புகழ் கொண்ட வல்லயப்புலம் மனோன்மணி அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மகிமை வாய்ந்ததாகும். மக்களின் இன்னல்கள் தீர்த்து அருள்பாலிக்கும் அன்னையை வணங்கி எல்லோரும் இன்புற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆலய பரிபாலன சபைத் தலைவர் கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின்

# வாழ்த்துரை

சிறுப்பிட்டிக் கிராமம் சைவத்தமிழர்கள் மட்டும் செறிந்து வாழும் பிரதேசமாகும். இங்கு விநாயகர், சிவன், முத்துமாரி, துர்க்கை, வைரவர், பூதவராயர் என எல்லாத் தெய்வங்களும் வழிபடப்பட்டு வருகின்றமை சிறப்புடையதாகும். மத்தித் திலகமாக வல்லையப்புலத்தில் பல காலமாக அன்னை மனோன்மணி அம்பாள் ஆலயம் சிறப்புப் பெற்று வந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு பழுதடைந்த ஆலயத்தை ஊர்மக்கள், வெளிநாடுகளில் வாழும் நம்மூர் அடியவர்கள் ஆகியோருடைய பங்களிப்புடன் பெரும் திருப்பணி வேலைகள் நடைபெற்று, மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது. எல்லோரினதும் ஒத்துழைப்பு, தொழிலாளர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய வேலை, சிவாசாரியார்களின் அரவணைப்பு என்பனவற்றால் எமது மனோன்மணி அம்பாள் ஆலயம் இத்துணை சிறப்புப் பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. எல்லோருக்கும் மனோன்மணி அம்பாள் நின்று அருள் வழங்க வாழ்த்துகின்றேன்.

ஆலய பரிபாலன சபைப் பொருளாளர் **சுப்பிரமணியம் கனகராசா** அவர்களின்

# வாழ்த்துரை

சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் ஆலயம் இன்று மகா கும்பாபிஷக விழாக் கண்டுள்ளது. ஆலயத்தின் திருப்பணிகள் யாவும் இனிது நிறைவுபெற்று கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இந்த ஆலயம் சிறப்புறப் பணியாற்றிய நிர்வாக உறுப்பினர்கள், அடியவர்கள் யாவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் மேலும் திருப்பணிகளும் விழாக்களும் சிறப்பெய்த ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டு எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

ஆலய பரிபாலன சபை செயலாளர் **செ. விஸ்வலிங்கம்** அவர்களின் வாழ்த்து

# அம்பிகை மலரடி வாழியவே!

கருணா கடாக்ஷி மனோன்மணித் தாயின்
பெருகிடு கருணை வாழியவே!
உருகிடும் அன்பரின் உளம் நிறை தாயின்
அருளும் பெருகி என்றும் வாழியவே!
வயல்வெளி தோட்டமும் வளம் தரும் பயிர்களும்
உயரியமரு தந்து உறைபவளே!
ஆன்மிகம் வளர அனைவரும் வாழ
தேன்தரு சுவையாய் அம்பிகை மலரடி வாழியவே!

(உதயன் சிறப்புமலர், 02.09.2011, வெள்ளிக்கிழமை)

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

**செ. கந்தசத்தியதாசன்** அவர்களின் வாழ்த்து

# மனோன்மணி அம்பாள் துதி

அருள் வழங்கும் சிறுப்பிட்டி மத்தியின் திலகமென விளங்கும்
அருள் நல்கும் சக்தியனைத்தும் அகத்தே கொண்டிலங்கும்
அருள் பெருகவோங்கும் மகா கும்பாபிஷேகம் அதனில் கலந்து
அருள் பெற்றே என்றும் சக்தியோடு சக்தியாய் சைவராய் வாழ்வீருயர்ந்து.

உ

# ஒல்லாந்தர் காலத்துக்கு முற்பட்ட பழைமைமிகு சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் ஆலயம்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து சிறுப்பிட்டி மத்தியை நோக்கி மேற்குப் புறமாகச் செல்லும் ஒழுங்கையில் 400 மீற்றர் தூரத்தில் மனோன்மணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. சிறுப்பிட்டி வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என நான்கு திசைகளுக்கு மத்தியில் அமைந்து அருளாட்சி செய்யும் அம்பாள் ஊருக்கு வடக்கில் அமைந்திருப்பது மட்டுமல்ல புத்தூர் உள்ளடங்கலாக சிறுப்பிட்டியில் சகல உபகிராமங்களிலும் வாழும் மக்களால் வழிபடப்படுவதோடு எல்லோராலும் எங்களது ஆலயம் என உரிமை கொண்டாடப்படுகின்றது. அத்துடன் உற்சவங்கள், உபயங்களும் இடம் பெறுகின்றன.

ஆலயத்தின் அமைவிடமும் அருள்வியாபகமும் அடியவர்களை தனதாக்கிக் கொண்டிருப்பதுடன் பூர்வீக ஆலயம் முற்றாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டு 150 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

ஆலயத்தின் பரிபாலன சபையின் தலைவர் கிராம அலுவலர் க. ஸ்ரீஸ்கந்தராசா திருப்பணி தொடர்பாகவும் அம்பாளின் அருள்வியாபகம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் 3 லட்சம் ரூபாவுடன் ஆரம்பமான ஆலயத் திருப்பணிக்கு வந்து சேரும் நிதி வளம் அடியவர்களை மெய்மறக்கச் செய்கின்றது. புலம்பெயர்ந்த உறவுகள், உள்ளூர் அடியவர்களும் தாராளமாக உதவுவதோடு பரிவார மூர்த்திகள் மற்றும் ஆலயத்தின் பாகங்களையே பொறுப்பேற்று கட்டுமானப்பணிகளை நிறைவு செய்வதற்கு முன்வந்துள்ளனர். இதன் மூலம் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன எனக் கூறினார். சிறுப்பிட்டி மத்தியில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்துக்கு முந்திய காலப் பகுதியில் காவல் தெய்வமான காத்தவராயன் மற்றும் அம்பாள் ஆலயமான பிரதிஸ்டை செய்து பொதுமக்களால் வழிபடப்பட்டு வந்த ஆலயமே தற்பொழுது ஸ்ரீமனோன்மணி அம்மன் ஆலயமாக வளர்ச்சி கண்டு அருளாட்சியிலும் ஆலயத் தோற்றத்திலும் உயர்ந்து நிற்கின்றது.

ஆலயத்துக்கென தர்மசாசனம் செய்யப்பட்ட 40 பரப்புக் காணியின் மத்தியில் வைதீக சிவாகம முறைப்படி அமைந்த ஆலயம், அதனோடு இணைந்த தீர்த்தக் கேணி, புதிய சித்திரத்தேர், தேர் முட்டி என்பவற்றுடன் அழகுற அமைந்துள்ளது. 1912ஆம் ஆண்டு ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்யப்பட்ட காணி தொடர்பான உறுதியில் ஆலயம் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கு முந்திய ஆவணங்களில் மற்றும் பொது மக்களின் பேச்சு வழக்கில் ஆலயத்தின் பெயர் சிவகாமி அம்மன், இராஜேஸ்வரி அம்மன், கருணாகர கடாச்சி போன்ற பல்வேறு பெயர்களால் வழங்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இந்த நாமங்களில் சில ஆலயத்தின் ஊஞ்சல் பாடலிலும் குறிப்பிடப்பட்டிருப்பதால் காலத்துக்குக் காலம் இந்த வகையில் பெயர் வழங்கலாயிற்று.

"ஆலயத்துக்கு நேர்த்தி வைத்தும் தமது சந்ததியின் பெயர் விளங்கவும் 200 பரப்புக்கு மேற்பட்ட காணி சிறுப்பிட்டிக் கிராமத்திலும் சிறுப்பிட்டிக் கிராமத்துக்கு

வெளியிலும் ஆலயத்தின் பெயரில் தர்மசாசனம் செய்யப்பட்டுள்ளது. தர்மசாசன காணியை கையாளுவோர் தர்மசாசனம் செய்தவர்களின் விருப்பத்துக்க அமைய ஆலயத்துக்கு காணிகளில் இருந்து கிடைக்கும் வருவாய் முழுவதையம் வழங்கி உதவுவது ஆலயத்தை மேலும் சிறப்புற நடத்துவதற்கும் திருப்பணிகளை திட்டமிட்ட முறையில் நிறைவு செய்வதற்கு உதவும்'' என ஆலய பரிபாலன சபையின் உபதலைவர் மு. இராமநாதன் தெரிவித்தார்.

ஆலயம் ஆரம்ப காலத்தில் தனிப்பட்டவர்களின் முகாமைத்துவத்தின் கீழ் செயற்பட்ட போதிலும் இடைக்காலத்தில் ஊர்ப் பொதுமக்களை உள்ளடக்கிய பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்டு சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டு தோறும் சித்திரை பௌர்ணமி நாளில் ஆலய மண்டபத்தில் பொதுக் கூட்டத்தை கூட்டி செயற்பாட்டு அறிக்கை கணக்கறிக்கை என்பவற்றை அடியவர்களுக்க சமர்ப்பித்துச் சீர்செய்வதோடு புதிய பரிபாலன சபையை தெரிவு செய்து ஆலய பரிபாலன சபையின் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள் பிரகாரம் செயற்பட உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள ஆலய பரிபாலன சபையின் தலைவராக க. ஸ்ரீஸ்கந்தராசா, உபதலைவர் மு. இராமநாதன், செயலாளர் செ. விசுவலிங்கம், உபசெயலாளர் க. குணசங்கர், பொருளாளர் சு. கனகராசாவோடு 6 பேர் கொண்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களும் இணைந்து ஆலயத்தின் திருப்பணி உள்ளடங்கலான அனைத்துப் பணிகளையும் சிறப்புடன் மேற்கொண்டு வருகின்றார். ஆலயத்தின் பரம்பரை பூசகர்களாக சிவஸ்ரீ குருமூர்த்தி ஐயர், காமாட்சிக் குருக்கள் நித்திய, நைமித்திய கிரியைகளை முன்னர் செய்து வந்தபோதிலும் தற்பொழுது நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் கோயிலில் பிரதமகுரு சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்கள் மேற்கொண்டு வருகின்றார். பூசகர்கள் தங்கியிருந்து பூசைகள் செய்வதற்கு வசதியாக 'குருக்கள் வீடு' புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28ஆம் திகதி புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெற்றது. 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேருக்கான செலவில் பெரும்பகுதியை சுவிஸில் வசிக்கும் கனகநாயகம் (பப்பு) வழங்கினார். அத்துடன் தற்பொழுது ஆலயத் திருப்பணிக்கும் நிதி உதவி வழங்குவதாகவும் கூறுகின்றார்.

1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம் பெயர்வின் போது ஆலயச் சுற்றாடலில் ஷெல் தாக்குதலால் சேதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் புதிய சித்திரத்தேருக்கோ ஆலயத்துக்கோ எந்தவித சேதமும் ஏற்படவில்லை. அனைத்தும் உள்ள படியே இருந்தன. 1996இல் மீளக்குடியேறிய போது அம்மனின் புதுமையை வியந்து அடியவர் மனம் மகிழ்ந்தனர்.

**ஞான ஆதவன்**

(உதயன் 25 ஒகஸ்ட் 2011, வியாழக்கிழமை)

உ

# காத்தவராயரைப் பரிவார மூர்த்தியாகக் கொண்ட சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் ஆலயம்

அருள்வியாபகம் நிறைந்த சிறுப்பிட்டி மத்தி கிரியப்பை மனோன்மணியம்பாள் ஈழத்தில் தலைசிறந்த அருள்மிகு அம்பாள் ஆலயங்களில் ஒன்றாக அடியவர்களால் கருதப்படுகின்றது. காவல் தெய்வம் காத்தவராயராகத் தான்தோன்றிக் கல்லாக உருக்கொண்டு மக்களைக் காத்து இன்று மனோன்மணி அம்பாளாக அருளாட்சி செய்யும் அம்பாளை மக்கள் பல பெயர் கொண்டு அழைக்கின்றனர்.

காத்தவராயராகக் கோயில் கொண்ட காலப்பகுதியில் நடந்ததாக மக்கள் பேசிக்கொள்ளும் ஆலயத்தின் அற்புதம் தொடர்பாக கதையில் அம்மன் ஆலயம் அமைக்கப்பட முன்னரே காலத்தால் முந்திய கோயிலாகக் காத்தவராயர் இருந்தார். காடு திருத்தி களனியாக்கிய வேளையில் பெரும்புற்றாக இருந்த பெருநிலத்தில் பெரிய கல்லொன்றில் காத்தவராயர் உருவம் தென்பட்டது. அதற்கு பொங்கலும் பூசையும் செய்து அநாதியாக வழிபட்டனர். அந்தக் காலப்பகுதியில் அங்கு வாழ்ந்து வழிபாடியற்றிய ஒருவரை ஒல்லாந்த ஆட்சியாளர் பிடித்துத் தண்டனையாக அலுப்பாந்தி கோட்டையில் சிறையிட்டனர். சிறைப்பிடிக்கப்பட்ட அவர் இன்றி பொங்கலோ பூசையோ நடைபெறாது என காத்தவராயர் ஆலயத்தின் முன் பழிகிடந்தனர் உறவினர்கள். என்ன அற்புதம் உறவினர்கள் நினைக்கும் வண்ணம் சிறைப்பட்டவர் பொங்கல் குடத்தை கையில் ஏந்திய வண்ணம் ஆலய வாசலில் வந்து நின்ற உறவினர்களுக்கு ஆறுதல் கூறி உரையாடினார். உறவினர்கள் காத்தவராயனின் அருள் வியாபகத்தை நினைத்து மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி காத்தவராயனுக்குப் பொங்கல், பூசை இட்டு வழிபட்டனர்.

மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் காத்தவராயன் ஆலயம் பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாக உட்பிரகாரத்தில் கோயில் அமைத்து வழிபடப்படுகிறது. இன்றும் காத்தவராயன் ஆலயத்தின் மூல விக்கிரகம் அநாதியில் இருந்த வழிபட்ட தான்தோன்றிக் கல்லே காணப்படுகின்றது. காத்தவராயர் ஆலயத்தை ஓவசியர் இளையதம்பியின் சந்ததியினர் உரிய முறையில் காலவோட்டத்துக்கு ஏற்ப பரிபாலித்து வருகின்றனர். காவல் தெய்வங்களாக மேலும் வைரவர் திரிசூலமும், சந்தான கோபாலன் உருவமும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வந்தது.

ஆலயத்தில் எழுந்தருளி மூர்த்தங்களாக ஸ்ரீ மனோன்மணி அம்பாள், விநாயகர், துர்க்காதேவி, விஷ்ணு (தேவியர் சகிதம்), காமாட்சி அம்பாள், கண்ணகை அம்பாள், சந்தான கோபாலர் உள்ளிட்ட ஏழு மூர்த்தங்களும் பரிவார மூர்த்தங்களாக விநாயகர் (கருங்கல் சிலை), விஷ்ணு (கருங்கல் சிலை), முருகன் (வேல்), காத்தவராயன் (தான்தோன்றிக்கல்), வைரவர், துர்க்கை (கருங்கற் சிலை) வழிபடப்படுகின்றன.

மனோன்மணி அம்பாள் ஆலயத்துக்கும் புத்தூர் சிவன் கோயிலுக்கும் நிலாவரை சைலேஸ்வரத்துக்கும் நெருக்கமான தொடர்புகள் உண்டு. ஆரம்ப காலத்தில் அம்பாள்

தீர்த்தமாடுவதற்கு புத்தூர் வழியாக நிலாவரை (இராமர் தீர்த்தம்) சென்று வருவதாக இருந்தது. பிற்காலத்தில் நிலாவரை ஆழ்கிணறு அகப்புறச் சூழலால் தூய்மை குறைந்ததை அடுத்து நிலாவரைக்குச் செல்லாமல் ஆலயத் திருமஞ்சனக் கிணற்றிலேயே தீர்த்தம் ஆடப்படுகிறது. ஆலய வாசலில் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தீர்த்தக்கேணியைப் புனரமைப்புச் செய்து அதில் தீர்த்தம் ஆட ஏற்பாடுகள் செய்யவிருப்பதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் க. ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

ஆவணிப் பூரணையில் தீர்த்தோற்சவம் நடைபெறும் வகையில் பதினொரு தினங்கள் பெருந்திருவிழா நடைபெறும். எட்டாம் திருவிழா வேட்டைத் திருவிழாவாகப் பெரும் எடுப்பில் கொண்டாடப்படும். அம்பாள் எழுந்தருளி ஊரை வலம் வந்து வேட்டையாடி சிறுப்பிட்டி ஞான வைரவர் ஆலயத்துக்குச் சென்று அடியவர்களையும், ஊர் மக்களையும் காத்தருளுகின்றாள். ஆலயத்தின் பாவனைக்கு இந்துக் கலாசார அமைச்சராக தி. மகேஸ்வரன் பதவி வகித்த காலப் பகுதியில் ஓட்டோ அன்பளிப்பாக வழங்கப்பட்டு தற்போது பாவனையில் உள்ளது.

ஆலயத்துக்கு அடியவர்களால் தர்ம சாதனம் செய்யப்பட்டுள்ள 200 பரப்புக்கு மேற்பட்ட காணியின் வருமானம் உரிய முறையில் ஆலயத்தை வந்தடையாமல் இருப்பது குறையாக இருப்பதாகக் கூறிய பரிபாலன சபையின் பொருளாளர் செ. விசுவலிங்கம் இது தொடர்பாக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகக் கவலை தெரிவித்தார்.

19.09.1991 ஆண்டு நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்தை அடுத்து ஆலயம் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்ட பொழிந்த வெள்ளைக் கல்லால் மூலஸ்தானம் நிர்மாணிக்கப்பட்டு மூடுமண்டபம், மகா மண்டபம் உட்பட முழுமையாக 150 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகம் வெள்ளிக்கிழமை (02.09.2011) நடைபெற்றது.

மனோன்மணி அம்பாள் ஆலயம் மேலும் அழகு பெற்று சிறுப்பிட்டிக்கு அழகூட்டுவதோடு அம்பாளின் தர்மசாசனங்களால் ஊர் வளம் பெறவாழ்த்துவோம்.

**ஞான ஆதவன்**

(உதயன், 01.09.2011, வியாழக்கிழமை)

### செ. விசுவலிங்கம் அவர்களின்

## மலராசிரியர் உரை

சிறுப்பிட்டி வல்லையப்புலம் கிறியப்பையில் குடிகொண்ட திருவருள்மிகு கருணா கடாட்சியாம் ஸ்ரீமனோன்மணியம்பாள் ஆலய 2009ம் ஆண்டின் புனருத்தாரணப் பணிகள் பெருமளவில் நிறைவேறி மகா கும்பாபிஷேகம் முடிவுற்று மண்டலாபிஷேகப் பூர்த்தி தினத்தில் இச்சிறப்பு மலர் வெளிவருகின்றது.

மகா கும்பாபிஷேகத்திலும் புனருத்தாரண வேலைகளிலும் நிதியுதவியளித்தும் உடல் உழைப்பை நல்கியும் பங்களித்த அம்பிகை அடியார்களையும் புனருத்தாரண வேலைகளைச் சிறப்புறச் செய்து முடித்த நவரத்தினம் கங்கை ரூபன் குழுவினரையும் பாராட்டு முகமாக அம்பிகை அருள் வேண்டிப் பிரார்த்தித்து வாடாத மலராகிய இச்சிறு குறிஞ்சி மலர் வெளிவருகின்றது.

பன்னிராண்டுகட்கொரு முறை மலரும் குறிஞ்சி மலர் போல 1991 கும்பாபிஷேக மலரும் 1995ல் தேர்த் திருப்பணிச் சிறப்பு மலரும் 2011ல் மீண்டும் ஒரு மகாகும்பாபிஷேக மலரும் வெளிவர அம்பிகை அருள்பாலித்துள்ளார்.

அம்பாள் ஆலயப் புனருத்தாரணப் பணிகள் நிறைவுற ரூபா முப்பது லட்சத்திற்கு மேல் அள்ளிக் கொடுத்த அம்பிகை அடியார் திருமதி இளையதம்பி ஆச்சிப்பிள்ளை குடும்பம் ரூபா பதினைந்து லட்சம் வாரி வழங்கிய திருமதி முத்துவேலு இளையதம்பி தனலட்சுமி குடும்பம் ரூபா பதின்நான்கரை இலட்சம் வாரி வழங்கிய திரு. சி. சண்முகலிங்கம் குடும்பம் இன்னும் லட்சக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் அன்பளிப்புக்களை செய்து திருப்பணி நிறைவுற உதவி அம்பாளின் அருட்கடாட்சத்தைப் பெற்ற அன்பர்கள் அனைவர்க்கும் கட்டுமானப் பணிகளில் உடன்நின்று உழைத்த மெய் அன்பர்கட்கும் பாராட்டுத் தெரிவிப்பது எங்கள் கடமை. அவர்கள் அம்பிகையின் அருட் கடாட்சத்திற்கு ஆளாவதென்பது திண்ணம்.

எப்போதும் எங்கள் அருகிலிருந்து ஆக்கமும் ஊக்கமும் கச்சிதமாக முடிக்க உதவிய தலைவர் திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா கிராம உத்தியோகத்தர் சிறுப்பிட்டி அவர்கட்கும் பொருளாளர் திரு.சு.கனகராசா முன்னாள் அதிபர் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா அவர்கட்கும் செயலாளர் திரு.செ.விசுவலிங்கம் முன்னாள் தமிழ் ஆசிரியர் ஆலோசகர் யாழ் வலயம், வேலைகளை முன்னின்று செய்வித்த உபதலைவர் திரு. மு. இராமநாதன் அவர்கட்கும் நாம் என்றும் நன்றியுடையோம். இச்சிறு மலரானது அவர்களது ஊக்குவிப்பாலேயே தொடங்கப் பெற்றது.

மிகக் குறுகிய காலத்தில் இதனை அச்சுப் பதித்து அழகிய மலராக்கித் தந்த ஆனைக்கோட்டை றூபன் அச்சகத்தாருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். விளம்பரங்களை தந்துதவிய வியாபார அன்பர்கட்கும் எமது நன்றிகள்.

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங் கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே யழியா வரமும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

உ

# தலைவர் திரு. க. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் முன்னுரை

சிறுப்பிட்டி திருவருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பிகை ஆலயத்தின் 2009 புனருத்தாரண திருப்பணிகள் 06.03.2009 பொதுக் கூட்டத்தோடு ஆரம்பமானது. 11.09.1991ல் செய்யப்பட்ட மகா கும்பாபிஷேகத்திற்குப் பின்னர் மிக நீண்ட காலமாக கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் புனருத்தாரணப் பணிகள் செய்யப்படவில்லை.

புதிய வங்கிக் கணக்கு ஆரம்பித்து வெளிநாட்டு அன்பர்களையும் தொடர்பு கொண்டு வெகுசிறப்பாக புனருத்தாரணப் பணிகளை முன்னெடுக்கும் விதமாக புதிய நிர்வாக சபை அடியேனைத் தலைவராகவும், செயலாளராக கோவில் முன்னைய திருப்பணிகளில் அனுபவம் பெற்ற ஆசிரியர் திரு.செ. விசுவலிங்கத்தையும், பொருளாளராக முன்னாள் ஸ்ரீசோமஸ்கந்தா அதிபர் திரு.சு. கனகராசாவும் மற்றும் முக்கிய நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் இணைத்துப் பெரும் பணியைத் தொடங்கினோம்.

07.09.2009 திங்கள் அதிகாலை 6 - 7 மணி வரையுள்ள ரேவதி நட்சத்திரத்துடன் கூடிய சுபவேளையில் அம்பாள் ஆலயத்தில் பூசை நடைபெற்ற பின்னர் புனருத்தாரண நாள் அத்திவாரம் சரியாக 6.50 மணிக்கு நடைபெற்றது. பித்தளை சருவச்சட்டி மூடியுடன் சில்லறைக் காசுகள் பவுன் பிற நவரத்தினங்கள், சொல்லப்பட்ட கிழங்கு வேர் வகைகள் 2009.09.07ம் திகதி புனருத்தாரணம் செய்யப்பட்டதைக் குறிப்பிடும் செப்புத்தகடு, யந்திரத்தகடு ஆகியவும் உள்ளே வைத்து நாள் வேலைகள் இனிது நிறைவுற்றது.

சைவ ஆசார முறைப்படி பரிபாலன சபை உறுப்பினர்கள் தலைவர், செயலாளர், கோவில் பூசகர் ச. ஜெயந்திநாதக் குருக்கள் அவரது தந்தையார் பிரம்மஸ்ரீ. சந்திரசேகரக் குருக்கள் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

எவ்வித குறைகளையும் கட்டுமாணப் பணிகளில் கூறமுடியாதவாறு சிறப்புறச் செய்து முடித்த அமரர் மு. நவரத்தினத்திற்கும் அவரது மகன் இளைய தலைமுறைக் கலைஞர் திரு. ந. கங்கைரூபனுக்கும் எமது பாராட்டுதல்கள் உரித்தாகுக.

"ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே" என்பது போல சகலவும் அம்பிகையின் அருட் கடாட்சத்தால் நடைபெறும் ஆடல்கள். ஆடலே புரியும் அம்பலவாணரும் அன்னை சிவகாமியும் இன்று இந்த நிலையை ஏற்படுத்தி மகா கும்பாபிஷேகம் இனிது நடைபெற்று திருவருள் பாலித்ததால் நாம் வெறும் தூசுகள். அவனருளாலே அவன் தாள் வணங்கி சிந்தை மகிழ சிவபுராணம் ஓதி அவன் புகழ் பாடுதலே நாம் செய்யும் நற்பணியாகும்.

திருப்பணி வேலைகளின்போது மிகுந்த ஆர்வத்துடன் அடிக்கடி என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்த இளையதம்பி ஆச்சிப்பிள்ளை ரூபா முப்பது லட்சத்துக்கு மேல் அனுப்பியதோடு நின்றுவிடாமல் புனருத்தாரண வேலைகள் பற்றி அடிக்கடி விசாரித்து வேலைகளை துரிதப்படுத்துமாறு ஊக்கம் கொடுத்தார்.

கோயில் ஐயாவின் குடியிருப்பு அமைத்தல் முதலியவற்றிலும் மிகுந்த அக்கறை காண்பித்தார். தனது மகள், மருமகன் திரு. மு. இராஜகோபால் ஆகியோர் கனடாவிலிருந்து இங்கு வரும் வேளைகளில் கோயில் வேலைகளைப் பார்வையிட்டு ஆவன செய்யுமாறு வற்புறுத்தி அனுப்புவார். எதிர்காலத்தில் அன்னதானமடம் அமைக்கவும் திட்டமிட்டுள்ளார்.

இதே போல வசந்த மண்டப வேலைகளை உபயமாக ஏற்ற திருமதி மு. இளையதம்பி தனலட்சுமி அம்மாவும் மகன் பிரபாகரனும் எங்களுடன் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு எடுத்த பணியை நிறைவேற்ற பெரிதும் உதவினார்.

மகாகும்பாபிஷேக மண்டலாபிஷேக நிகழ்வுகளைத் தரிசிக்க சுவிஸ்லாந்திலிருந்து திரு. சி. சண்முகலிங்கமும், கனடாவிலிருந்து நீண்ட தூரம் பயணித்து வந்த திருமதி. ஆச்சிப்பிள்ளை, மகள் பராசக்தி, திரு. திருமதி சந்திரா கனகராசா, லண்டனிலிருந்து அருட்கணேசன் குடும்பம் ஆகியோருக்கும் அம்பிகை அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

எமது பரிபாலன சபை ஆரம்பகால உறுப்பினரும் சி.வை.தாமோதரம்பிள்ளை ஒன்றிய செயலாளர் வேலுப்பிள்ளை குடும்பமும், கும்பாபிஷேக நிகழ்வுகளில் பங்குகொண்டு திரும்பினர்.

திரு. சி. சண்முகலிங்கம் ஏற்கனவே தான் அனுப்பிய எட்டு லட்சம் ரூபாவை எமது வேண்டுதற்படி செலவு செய்த பின்பும், இந்தியாவில் கும்பாபிஷேகத்திற்கான திரவியங்களையும் குருக்கள்மார் வேட்டி சால்வைகளையும் கும்பாபிஷேக நிதி உதவிகளையும் தந்து மேலும் உதவிகள் தருவதாக உறுதியளித்து அம்பிகை அருள் பெற்றுத் திரும்பினார். திருமதி. ஆச்சிப்பிள்ளையும், மகள் பராசக்தியும் இந்தியாவிலிருந்து அம்பிகைக்குரிய முடி, குடை, ஆபரண அலங்காரங்களை அர்ப்பணித்து அகமகிழ்ந்தனர். இவற்றோடு பெரிய காண்டாமணியும் வழங்கியுள்ளனர்.

இன்னும் ஒவ்வொருவராக பேர் குறிப்பிட்டு எழுதினால் மிக விரிவாகும் என்று அஞ்சி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து அம்மாள் கருணையைப் பெற்றுக் கொண்ட அனைத்து வெளிநாட்டு உள்நாட்டு மனோன்மணி அம்பிகை தொண்டர்கட்கும் நன்றிகூறி அவர்கள் வாழ்வு வளம்பெற அம்பிகையின் பாதார விந்தங்களைப் பணிந்து போற்றுகின்றேன்.

இம்மலராக்கத்திற்குத் துணை நின்ற ஆசிரியர் திரு.செ.விசுவலிங்கத்திற்கும் இதனை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள்.

## பொருளாளர் திரு. சு. கனகராசா அவர்களின் பேனாவிலிருந்து.......

### நிதி அறிக்கை 09.03.2009 தொடக்கம் 16.10.2011 வரை

1. வங்கிக் கணக்கும் நடைமுறைப்படுத்தலும்

01. வங்கிக்கணக்கு இல: (S/A) 8953549 இலங்கை வங்கி, யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி.

02. அன்பளிப்பு மூலம் கிடைக்கும் பணம் எல்லாவற்றிற்கும் உடனடியாகப் பற்றுச்சீட்டு வழங்கப்படுவதோடு வங்கியில் வைப்பும் செய்யப்படுகிறது.

03. வங்கியிலிருந்து பணம் எடுப்பதை, பொருளாளருடன் தலைவர் அல்லது செயலாளர் கூட்டாகச் சேர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

04. ஒவ்வொரு கொடுப்பனவுக்கும் தனித்தனியான செலவுறுதிச் சீட்டு, பூரணப்படுத்திப் பற்றுச்சீட்டு இணைக்கப்படுவதோடு பணம் பெறுபவர். பொருளாளர், தலைவரின் கையொப்பங்களும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

05. கோவில் கட்டிட நிதிக் கணக்குகள் யாவும் வருடா வருடம் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் திரு. தி. செந்திநாதன் அவர்களால் பரீட்சிக்கப்பட்டு சரியென உறுதி செய்யப்படுகிறது.

06. நிதி அன்பளிப்பாளர்களின் பட்டியலும், கணக்குப் பரிசோதகரால் பரீட்சிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட கட்டிடக் கணக்குகளின் தொகுப்புக் கூற்றும் தனிப் பத்திரங்களாக இதன் பிற்பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கும்பாபிஷேகம் நடாத்தத் தீர்மானித்தவேளையில் திருப்பணியைத் தொடர நிதி போதாதிருந்தது எனத் தெரிவித்தவேளையில் தலைவர், உபதலைவர் ஆகியோர் இணைந்து எவ்வகையிலும் நாம் நிதியைப் பெற்று எடுத்த காரியத்தை இந்த ஆண்டில் நிறைவுபடுத்துவோம் எனக் கூறினர். இதனால் கும்பாபிஷேகம் குறித்த காலத்தில் நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது.

2. மகா கும்பாபிஷேகம்

கட்டிடத் தொகுதியின் முக்கிய பகுதிகள் பூரணப்படுத்தப்பட்டு மகா கும்பாபிஷேகம் 02.09.2011 ஆவணி மாதம் 17ம் நாள் காலை சிம்ம லக்ன சுபமுகூர்த்தத்தில் மங்களகரமாக இனிது நிறைவேறியுள்ளது. இப்புனித விழாவைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் மகேஸ்வர பூசையும் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### பூரணப்படுத்திய கட்டிடப் பகுதிகள்

3. மூலஸ்தானம்

மூன்று தளப் பண்டிகையைக் கொண்ட கர்ப்பக் கிரகத்தின் அத்திவாரம் காத்திரமாகப் போடப்பட்டு வெள்ளைப் பொளி கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இதன் கால் பிரவாகை 9 அடி 9 அங்குலம் (1 தெண்டு) இதன் மூடு பாகைக் கற்களும், தீர்த்தக் கோமுகையும் அம்மாளின் ஆசனக் கல்லும் தளவரிசைகளும் செதுக்கப்பட்ட கருங்கற்களாலானவை. சீர்காழியிலிருந்து வரவழைக்கப்பட்ட சித்திரக் கலைஞர் ஸ்தபதியாரின் கைவண்ணத்திலும் நல்லைக் கந்தன் ஓவியரின் பன்முக வர்ணத் தீட்டலிலும் உருவான அறுபத்தேழு (67) விக்கிரகங்கள் (பாவைகள்) கர்ப்பக்கிரகத்தின் மூன்று தளங்களையும் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

4. அர்த்தமண்டபம்

இம்மண்டபத்தின் சுவர்களும் வெள்ளைப் பொளி கற்களால் கட்டப்பட்டு நீளமான மூன்று வெள்ளைப் பொளி கற்கள் மூடுபாகைக் கற்களாக அமைக்கப்பட்டன. இக்கட்டிடத்தின் மேலே கட்டப்பட்ட கர்ண கூடு சாலையின் தெற்குப் பக்கத்தின் அமைக்கப்பட்ட பிள்ளையார், பார்வதி, சிவன், முருகன், நாரதர் விக்கிரகங்கள் ஞானப் பழக் காட்சியையும் வடக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்ட பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் விக்கிரகங்கள் இறைவனுடைய படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

5. மகா மண்டபம் தரிசன மண்டபம்

அம்மாளின் ஆசனக் கல்லின் உயர்வுக்கமைய இம்மண்டபங்களின் சுவர்களும் ஒரு அடி அளவில் உயரமாகக் கட்டப்பட்டதோடு சுவர்களின் நீள்வாட்டத்தில் கொங்கிறீற்றுத் தூண்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. சுவர்களின் உள்ளும் புறமும் ஒரு அங்குல ஆழத்துக்குக் கொத்திப் பூசப்பட்டிருக்கின்றன. இம் மண்டபங்களின் கூரையாக சொக்கட்டான் வடிவில் கொங்கிறீற்றுப் பிளாற்றுப் போடப்பட்டிருக்கிறது. தரிசன மண்டபத்தின் வாசலின் பக்கத்தில் எழு (7) விக்கிரகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தரிசன மண்டபத்தின் அடித்தளத்துக்கு "ரெறாசோ" பதிக்கப்பட்டிருக்கிறது.

## பரிவாரத் தெய்வங்கள்

6. பிள்ளையார்

கட்டிடத்தின் பண்டிகை பழுதுபார்க்கப்பட்டு புதிய நாசித் தலைகளும் திருவாசிகளும் பதினொரு விக்கிரகங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பஞ்ச வர்ணம் தீட்டப்பட்ட கட்டிடம் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

7. பூமிதேவி ஸ்ரீதேவி சமேத மகாவிஷ்ணு

கட்டிடத்தின் பண்டிகை புதிதாகக் கட்டப்பட்டு பொருத்தமான நாசித் தலைகளும் திருவாசிகளும் ஏழு விக்கிரகங்களும் சேர்க்கப்பட்டதோடு நீல நிறம் மேலோங்க பஞ்ச வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

8. கந்தசுவாமியார்

கட்டிடத்தின் பண்டிகை பழுதுபார்க்கப்பட்டு புதிதாகச் செய்யப்பட்ட திருவாசிகளும் நாசித்தலைகளும் ஒன்பது மயில்களும் ஒரு முருகன் பொம்மையும் சேர்க்கப்பட்டதோடு பொருத்தமான மஞ்சள் வர்ணமும் தீட்டப்பட்டுள்ளது.

9. காத்தவராயர்

காவல் தெய்வமான காத்தவராயர் மூலஸ்தான அம்மனுக்குப் பக்கவாட்டில் முன்பக்கமாக இருக்க வேண்டுமென்ற கோவில் கட்டிட விதிகளுக்கமைய

முன்னர் அமைந்திருந் காத்தவராயரின் இடத்துக்கு கிழக்கே புதிய கட்டிடமொன்று கம்பீரமான தோற்றத்தோடு கட்டப்பட்டிருக்கிறது. இக்கட்டிடத்துக்குத் தீட்டப்பட்ட பஞ்ச வர்ணங்கள் மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றன. இதற்கான அடிக்கல் திரு.ஏ.எம்.இராஜகோபால், பாலசுப்பிரமணியம் குடும்பத்தினரால் நாட்டப்பட்டது.

### 10. வைரவர் கோவில்

வைரவருக்கென ஒரு தனிக் கட்டிடம் யாகசாலைக்கும் மணிக்கோபுரத் துக்குமிடையில் கட்டப்பட்டதோடு வைரவர் உருவச் சிலையும் கருங்கல்லில் பொளிந்தெடுத்து பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இக்கட்டிடத்துக்கு மட்டும் இரட்டை வர்ணம் தீட்டப்பட்டது புதுமையும் தனித்துவமும் அளிக்கிறது.

### 11. துர்க்கை

துர்க்கைக்கான மாடமொன்று அர்த்த மண்டபத்தின் வடக்குப் பக்கச் சுவரோடு, தீர்த்தக் கிணற்றுக்கும் சண்டேஸ்வரருக்கும் இடையில் அமைக்கப் பட்டிருக்கிறது.

### 12. சண்டேஸ்வரர்

தீர்த்தக் கிணற்றுக்கு மேற்கேயும் அர்த்த மண்டபத்துக்கு வடக்கேயுமுள்ள இடத்தில் வழிபடுவோருக்கெல்லாம் பலன் வழங்கும் சண்டேஸ்வரருக்குப் புதிதாக ஒரு கோவில் அமைக்கப்பட்டதோடு கருங்கல்லில் பொளிந்தெடுத்த சண்டேஸ்வரர் உருவச் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இக்கட்டிடத்தின் பண்டிகையில் ஆறு (6) விக்கிரகங்கள் சேர்க்கப்பட்டதோடு பஞ்ச வர்ணம் இடம்பெற்றிருக்கிறது.

## மண்டபங்கள்

### 13. கொடித்தம்ப மண்டபம்

இம்மண்டபத்தின் நாலு மூலைகளிலும் 18 அடி உயரமுள்ள வேலைப்பாடுகளுடன் கூடிய கொங்கிறீற்றுத் தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு இரு தூண்களுக்கும் குறுக்கே 30 அடி நீளமும் 1½ அடி தடிப்புமுள்ள வில்லுவடிவான கொங்கிறீற்று வளைவுகள் அமைக்கப்பட்டிருப்பதோடு தூண்களின் நீள்வட்டத்தில் 1½ அடி தடிப்புள்ள கொங்கிறீற்று பீமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மேல் மரத்திலான கோப்பியம் அமைத்து ஓடு போடப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்தின் நடுவே நந்தி பலிபீடம் கொடி மரத்துக்கான மூன்று தளமேடை அமைக்கப்பட்டு புதிதாக கருங்கல்லில் பொளித்தெடுத்த நந்தியும் பலிபீடமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அடுத்த வருடம் கொடியேற்று வைபவத்துக்கு ஒரு மாதம் முன்னர் கொடிமரம் நிறுத்துவதற்கான ஏற்பாடுகளெல்லாம் உறுதியாக்கப்பட்டுள்ளன. மூன்று தளமேடையின் கிழக்குப் பக்கத்தில் ஸ்தம்பப் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. கொடித்தம்ப மண்டபத்தின் அடித்தளத்துக்கு "ரெறாசோ" பதிக்கப்பட்டுள்ளது.

## 14. வசந்த மண்டபம்

இம் மண்டபம் 19' - 6' (2 தெண்டு) அளவுப் பிரமாணத்தில் புதிய இடத்தில் விசாலமாகவும் கம்பீரமானதுமான தோற்றத்துடன் கட்டப்பட்டிருக்கிறது. கட்டிடத்துக்குள்ளே எழுந்தருளிச் சுவாமிகள் வீற்றிருக்க உயரமான மேடை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. கூரையாக கொங்கிறீற்றுப் பிளாற்று அமைந்திருக்கிறது. பண்டிகையில் பிரமாண்டமான திருவாசிகளும் நாசித் தலைகளும் உள்வாங்கப் பட்டதோடு இருபத்தொரு 21 விக்கிரகங்களும் சேர்க்கப்பட்டுக்கான வாசலுக்கு சுருக்குக் கேற் அமைக்கப்பட்டிருக்கிறது. சுருக்குக் கேற்றுக்கு முன்னால் அம்மனின் பெரிய உருவம் வரையப்பட்ட "ஓடு திரை" தொங்கவிடப்பட்டிருக்கிறது.

## 15. பெரிய மண்டபம்

கொடித்தம்ப மண்டபத்துக்கும் கோபுர நுழை வாயிலுக்குமிடைப்பட்ட நீளமான மண்டபம் முற்றாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஆறு (6) சுண்ணாம்புத் தூண்களுக்குப் பதிலாக வேலைப்பாடுகளுடன் கூடிய கொங்கிறீற்றுத் தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. தூண்களுக்குக் குறுக்கே வில்லு வடிவான கொங்கிறீற்று வளைவுகளும் தூண்களின் நீள்வாட்டில் 18 "தடிப்புள்ள கொங்கிறீற்று பீம்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இம் பீம்களுக்கு மேல் மரக்கோப்பியம் அமைத்து ஓடு போடப்பட்டுள்ளது.

இதே போன்று வசந்த மண்டபத்துக்கு இரு மருங்கிலும் உள்ள குறுகிய மண்டபங்களுக்கும் கொங்கிறீற்றுத் தூண்களும் வளைவுகளும் பீம்களும் அமைக்கப்பட்ட தோடு கோப்பியமும் அமைத்து ஓடு போடப்பட்டுள்ளது.

## 16. யாகசாலை

இம்மண்டபம் திருவிழாக் காலங்களில் பத்து நாட்கள் மட்டும் பாவிப்பதாக இருந்தும் ஏனைய கட்டிடங்களுக்குத் தோல்வி போகா விதத்தில் புதிய யாகசாலை படைக்கலச்சுவர்களும் வரிவர்க்கங்களும் கொங்கிறீற்று பிளாற்றுக் கூரையும் வாசலின் மேற்பக்கத்தில் மூன்று விக்கிரகங்களும் அமையக் கட்டப்பட்டிருக்கிறது.

## 17. மணிக்கோபுரம்

இதற்கான இறுக்கமான அத்திவாரம் போடப்பட்டு நாலு கொங்கிறீற்றுத் தூண்கள் நிறுத்தப்பட்டு அதன் மேல் மூன்று தாப்பண்டிகை கட்டப்பட்டிருக்கிறது. இக்கட்டிடத்தில் ஏழு (7) விக்கிரகங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பாவனையிலிருந்த 150 கிலோ கிராம் நிறையுள்ள மணி, கர்மாரம்பத்துக்கு முதல் நாள் ஏற்றப்பட்டுப் பாவனையிலிருந்து கொண்டிருக்கிறது. ஆனால் திருமதி இராஜகோபால் பராசக்தி இந்தியாவிலிருந்து 250 கிலோ கிராம் நிறையுள்ள ஒரு பெரிய மணியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன. அம்மணி கிடைத்ததும் அதனைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள நன்றியறிதலோடு ஆயத்தமாக இருக்கிறோம்.

## 18. நுழைவாயிலும் எல்லைப்படுத்தலும்

கோபுர நுழைவாயில் புதிதாகவும் அழகுறவும் கட்டப்பட்டிருக்கிறது. இதன் இரு மருங்கிலுமுள்ள சுவர்கள் வேலைப்பாடோடும் வரி வர்க்கணங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. நுழைவாயிலுக்கு மேலே கட்டப்பட்ட முக்கோண

வடிவமான தூபியில் அம்மன், விநாயகர், முருகன், இடபம், மயில் போன்றன பத்து (10) விக்கிரகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நுழைவாயிலுக்கு வடக்கேயுள்ள வைரவர் மணிக்கோபுரம், யாக மண்டபம், வசந்த மண்டபம் ஆகியவற்றின் வரி வர்கணங்களோடு கூடிய கிழக்குப் பக்கச் சுவர்களும் நுழைவாயிலுக்கு வடக்கே புதிதாகக் கட்டப்பட்ட வரிவர்க்கணங்களோடு கூடிய நீண்ட படைக்கலச் சுவரும், ஒரே நேர் கோட்டில் அமைந்து கோயிலின் புதிய கிழக்கெல்லையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

## 19. வெளி மண்டபம்

நுழைவாயிலுக்கு முன்பான அமைந்த இம்மண்டபத்தின் நீளம் 34 அடி அகலம் 36 அடி. இம் மண்டபத்தின் வேலைப்பாடுகளுடன் கூடிய பன்னிரண்டு (12) கொங்கிறீற்றுத் தூண்களின் மேல் பலமான பீம் போடப்பட்டு கோப்பியம் அமைத்து ஓடு போடப்பட்டுள்ளது. இம்மண்டபம் மகாயாக நவகுண்டங்கள் அமைப்பதற்காகக் கட்டப்பட்ட போதிலும் நிரந்தரமாக நிலைத்து நின்று கோயிலின் பன்முகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புக்கள் உண்டு.

## 20. குருக்கள் வதிவிடம்

சுண்ணாம்புக் கலவையினால் கட்டப்பட்ட பழைய குருக்கள் மடம் நீண்ட காலமாகக் குடியிருப்பின்றி பழுதடைந்த நிலையில் இருந்தது. கோவில் குருக்களுக்கான வதிவிடமொன்ற அமைக்க வேண்டுமென்பது திருமதி இளைதம்பி ஆச்சிப்பிள்ளையின் நீண்ட நாட்கனவு. இதற்காக ஆரம்ப நிதியாக ஐந்து இலட்சம் ரூபா அனுப்பியிருந்தார்கள். ஆச்சிப்பிள்ளை அக்காவின் மருமகன் திரு.ஏ.எம். இராஜகோபாலினால் புதிய குருக்கள் வாசஸ்தலத்துக்கான அத்திவாரம் போடப்பட்டது. முன்னர் வடக்கு வாசலாக இருந்த வீட்டை கிழக்கு வாசல் வீடாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இதன் கிரகப் பிரவேசம் கர்மாரம்ப தினத்துக்கு மூன்று நாட்களுக்குமுன் நடைபெற்றது. கோவிலின் மகாகும்பாபிஷேக விழாக் காலத்தில் அந்தணச் சிவாச்சாரியார்கள் இப்புதிய குருக்கள் வாசஸ்தலத்தில் தங்கியிருந்தார்கள்.

சிறுப்பிட்டி மனோன்மணி அம்மனின் மேன்மைக்கும் புகழுக்குமாக எத்தியாகத்தையும் செய்யவல்ல மனோ பக்குவத்தையும், மனோ பாவத்தையும் கொண்ட ஆச்சிப்பிள்ளை அக்கா அளித்துள்ள சுயநலமற்ற ஒத்துழைப்பு நன்று என்று கூறுவதோடு அவர்கள் சுகதேகியாகப் பல்லாண்டு வாழ்ந்து அவர்களது இஸ்ட தெய்வமான அம்மனுக்குத் தொடர்ச்சியான தொண்டு செய்யும்படி வாழ்த்தி நிற்கின்றேன்.

எம் ஆலயத்தின் புனருத்தாரணத் திருப்பணிகள் பல்வேறுபட்டவர்களின் ஒத்துழைப்போடு நிறைவேறியுள்ளது. நிதி உதவி வழங்கியோர், சரீர உதவி வழங்கியோர், பரிபாலனசபையினர், தொண்டர்கள், இளைஞர்கள், பெண்கள், கலைஞர்கள் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. மிகுதி வேலைகளை நிறைவேற்ற உங்கள் உதவிகளை என்றும் நாடி நிற்கின்றோம்.

**நன்றிகள்.**

# சக்தி வழிபாடு

சண்மதங்களுள்ளே சக்தியை முழுமுதலாகக் கொண்ட நெறி சாக்தமாகும். சாக்த நெறியைக் கடைப்பிடிப்போர் சாக்தர் என அழைக்கப்படுகின்றனர். சிவன் அறிவின் ஆதாரம் சக்தி அதன் இயக்கமாக விளங்குகின்றாள். சக்தி எனப்படுவது வல்லமை, ஆற்றல் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.

இந்தியாவிலே இன்றும் வங்காளத்திலும், அசாம் மாநிலத்திலும் சாக்தர்கள் வாழுகின்றனர். சாக்த மதமானது தனி ஒரு மதமாக வளர்ச்சி அடைந்தாலும் இன்றும் சைவத்தோடு இணைந்த நிலையிலும் காணப்படுகின்றது. அதாவது சைவசித்தாந்தம் "சக்தி இன்றிச் சிவம் இல்லை சிவம் இன்றிச் சக்தி இல்லை" என்கிறது. பௌத்தரும் சக்தியை வழிபடுகின்றனர்.

சாக்த வழிபாடானது இருவேறு வழிமுறைகளாக வளர்ச்சி அடைந்துள்ளது.

01. தட்சணமார்க்கம் (தட்சணசாரம்) எனப்படுவது. வைதிக முறையில் அம்பிகையை வழிபடும் முறையாகும். வேதங்கள் கூறிய முறையிலே சக்தியை வழிபடுபவர்களுக்கு இந்திரப் பதவி கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

02. வாம மார்க்கம் (வாமசாரம்) எனப்படுவது வைதிகநெறிக்குப் புறம்பாகி பல் அம்சங்களில் வழிபடலாகும். இதிலே பஞ்சமகாரர்கள் எனக் குறிப்பிடப்படும் ஐவகை இன்பங்களைத் துய்த்தல் அவசியம் எனக் கருதப்படுகின்றது. அவையாவன.

1. மத்ஸ்யம் (மீன்)
2. மத்யம் (மது)
3. மாசிகம்
4. முத்திரை (கைவிரல்கள் ரூபம் காட்டும்.
5. மைதுனம் (பெண் உறவு) என்பவையாகும்.

இந்த வழிபாட்டு முறையிலே ஒழுக்கக் கேடுகள் பல தோற்றம் பெற்றன. இதனால் இத்தகைய பஞ்சமகாநெறி நாளடைவில் தவிர்க்கப்பட்டு மதுவுக்குப் பதிலாக இளநீரும், மாமிசத்துக்கு பதிலாக இஞ்சியும் கொள்ளப்பட்டது.

மேலும் சக்தியை ஆகம விதி முறைகளை அனுசரியாது கிராமிய மட்டத்தில் நாட்டார் வழிபாடாகவும் வழிபடுவர் அத்துடன் சக்தியானவள் உருவமாக அமைத்து ஆலயங்களில் வைத்து மந்திரோபாசனை செய்து ஆகம முறைப்படியும் வழிபடப் படுகின்றான். சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் என அழைக்கப்படுகின்றன.

சாக்த ஆகம முறைப்படி அம்பிகையை வழிபடும் அடியவர்கள் அனுசரிக்க வேண்டிய ஆறு கடமைகள் பின்வருமாறு.

1. நாடோறும் நீராடல்
2. சந்தியாவந்தனம் செய்தல்
3. ஹோமம் செய்தல்
4. ஜபம் செய்தல்
5. தேவி ஆராதனை
6. சக்தி பூசை என்பனவாகும்.

அடுத்து சிவசக்தி வழிபாட்டின் முக்கியமான மூன்ற முறைகளாவன. மந்திர, தந்திர, யந்திர வழிபாடாகும். இவ் மந்திர, யந்திர, தந்திர வழிபாட்டின் உயர் சின்னமாக ஸ்ரீசக்கரம் விளங்குகின்றது. ஸ்ரீசக்கரமானது சிவசக்தியின் உடலாகக் கொள்ளப்படுகின்றது. அம்பிகையின் பெருமைகளை உள்ளடக்கிய மந்திர சாதனம் ஸ்ரீவித்தை என்பதாகும். அவ்வித்தையை உள்ளடக்கி உபாசனைப் பொருளாகக் காட்சியளிப்பதே ஸ்ரீசக்கரம் என்பதாகும். ஸ்ரீசக்கரமானது மந்திரங்களின் பிரிவால் மூன்று வகைப்படும். அவையாவன மேரு, கைலாசம், பூமி என்பனவாகும்.

ஸ்ரீசக்கரத்தில் மூன்று ரேகைகள், மூன்று வலயங்கள், 43 முக்கோணங்கள், 16 தாளங்கள் காணப்படுகின்றன. இவற்றின் கருத்தாழம் மிகப் பெரியதாகும்.

மேலும் சக்திக்குரிய விரதங்களுள்ளே. நவராத்திரி, வரலட்சுமி விரதம், வெள்ளிக்கிழமை என்பன முக்கியம் பெறுகின்றன.

நவராத்திரி விரதமானது சாரதா நவராத்திரி, வசந்த நவராத்திரி என இரண்டு வகையாக அனுட்டிக்கப்படுகின்றது.

சாரதா நவராத்திரி புரட்டாதி மாத வளர்பிறை முதல் ஒன்பது தினங்கள் அனுட்டிக்கப்படுகின்றது. முதல் மூன்று தினங்களும் துர்க்கையாகவும் அடுத்த மூன்று தினங்கள் இலக்குமியாகவும் இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதியாகவும் எண்ணி வழிபடுதலாகும். இவ்வழிபாட்டின் மூலம் வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைப் பெறலாம்.

நவராத்திரியில் ஒன்பதாம் நாளாகிய மகாநவமியை கலைவிழாவாகவும், வீர விளையாட்டு விழாவாகவும் கொண்டாடுவர். மகாநவமிக்கு அடுத்த நாள் விஜயதசமி எனப்படும். இத்தினத்தில் ஏடு தொடக்குதல் புதிதாகக் கலைப் பயிற்சியைத் தொடங்குதல் போன்ற நிகழ்வுகளை மேற்கொள்ளல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். ஆலயங்களில் அன்று மகிடாசுர சங்காரம் இடம் பெறுகின்றமை நோக்கத்தக்கதாகும். இவ்விரத நியதிகளில் ஒன்றாக வீடுகளில் கொலு வைத்தல் இடம்பெறுகின்றது.

வசந்த காலத்தில் அனுட்டிக்கப்படுவது வசந்த நவராத்திரியாகும். வசந்த நவராத்திரி இலங்கையில் முன்னேச்சரத்திலும். இந்தியாவில் சிற்சில பகுதிகளிலும் அனுட்டிக்கப்படுகின்றது.

வரலட்சுமி விரதமானது ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமைகளில் அனுட்டிக்கப்படுவதாகும். செல்வ போகங்கள், சௌபாக்கியங்கள், புத்திரப்பேறு என்னும் பலன்களைப் பெறும் நோக்கோடு இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

அடுத்து சக்தி தனது வடிவினைப் பரித்து கோயில் கொண்டு அருள்பாலிக்கும் இடங்களாக இந்தியாவில் சிறப்புப் பொருந்திய பல தலங்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

| | | |
|---|---|---|
| காஞ்சி | - | காமாட்சி |
| காசி | - | விசாலாட்சி |
| மதுரை | - | மீனாட்சி |
| திருவெண்ணாமலை | - | உண்ணாமுலை |
| திருவையாறு | - | அறம் பெருஞ் செல்வி |
| திருக்கடவூர் | - | அபிராமி |

திருக்காளாத்தி - ஞானபூங்கோதை
சிதம்பரம் - சிவகாமி

போன்ற பல தலங்கள் காணப்படுகின்றன. இவ்வாறே இலங்கையிலும் பல தலங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதாவது

சுதுமலை - புவனேஸ்வரி
நயினை - நாகபூஷணி அம்மன்
தெல்லிப்பளை - துர்க்கை அம்மன்
மாத்தளை - முத்துமாரி அம்மன்
நல்லூர் - வீரமாகாளி அம்பாள்

என்பன போன்ற ஆலயங்கள் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. ஆயினும் சாக்தம் என்ற தனி மதப்பிரிவு இலங்கையில் இல்லை. ஆனால் சக்தி வழிபடல் மற்றும் விரதங்களை அனுட்டித்தல் போன்றன இடம்பெறுகின்றமை நோக்கத்தக்கதாகும்.

மேலும் சக்தி ஆலயங்களிலே குங்குமப் பிரசாதம் வழங்கப்படுகின்றன. அவ் ஆலயங்களினுடைய சிறப்புக்குரிய அம்சமாகக் காணப்படுகின்றது.

எனவே சக்தி வழிபாடானது சாக்தநெறி என்ற தனி மதப் பிரிவாகவும் சைவத்தோடு இணைந்த நிலையிலும் சிறப்புப் பொருந்திய வழிபாடாகக் காணப்படுகின்றமை நோக்கத்தக்கதாகும்.

சைவப்புலவர்,
திருமதி. தயாளினி செந்தில்நாதன்
**M.A.Dip.in.Edu.(Jaf.)**

**கே. எஸ். சிவஞானராஜா அவர்களின் வாழ்த்து**

# அம்பாள் சுகமளிப்பாள்

சாந்த முகமும் சந்தோஷப் புன்னகையும்
சப்த வரங்களையும் அருள்வாள்
காந் மொழியும் காலிக்கும் வாழ்வையும்
கை கூப்பக் கரம் தருவாள்
சோர்ந்தபோதும் துவளாமல் மீண்டிட
சிறுப்பிட்டி அம்பாள் சுகமளிப்பாள்
நேர்ந்து நீ எது செய்தாலும் நினது
நம்பிக்கை ஒருபோதும் வீண் போகாது
தோய்ந்து ஒருமுறை சுற்றி வந்தால் உன்
துயரத்துக்கு ஒரு விடிவு தெரியும்
தேர்ந்து ஒரு காரியம் வென்றிடத்
தெரிந்து தேவியைப் போற்று
கூர்ந்து உன் வாழ்வினைக் கவனி- அங்கே
குல தெய்வம் மனோன்மணி உள்ளாள்
தீர்ந்து போகும் வில்லங்கம் யாவுமே
தேவி மனோன்மணியைப் போற்றுவோம்.

# வரலாறு

## கோவில் ஆரம்பித்த காலம்

சிறுப்பிட்டி வல்லயப்புலம் சிவகாமி அம்மன் ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலம் குறித்து திட்ட வட்டமான எழுத்து மூல ஆதாரங்களோ சான்றுகளோ கூறமுடியாதுள்ளது. 1922ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி நொத்தாரிசு அ.க. சோமசுந்தரம் முகதாவில் 307ம் இலக்கத்தில் நிறைவேறியது தரும சாதன உறுதியால், புத்தூர் தெற்கைச் சேர்ந்த சின்னையா பூதத்தம்பி என்பவர் சிறுப்பிட்டி வல்லயப்புலம் என்னும் காணியில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்மன் கோவிலுக்கும், அக்கோவிலில் அவரால் கட்டுவிக்கப்பட்ட விக்கினேஸ்வரர் கோவிலுக்கும் நித்திய நைமித்திய பூசைகளை நடாத்துவதற்கு தர்ம நன்கொடை செய்துள்ளார்.

1926ம் ஆண்டு சித்திரை மாதம் 4ம் திகதி நொத்தாரிசு அ.க.சோமசுந்தரம் முகதாவில் 2266ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட தரும சாதன உறுதியால் புத்தூர் தெற்கைச் சேர்ந்த பூதத்தம்பி கைம்பெண் சின்னாச்சிப்பிள்ளையும் பெரிதம்பி மகள் சின்னப்பிள்ளையும் சிறுப்பிட்டி வல்லயப்புலத்தில் எழுந்தருயிருக்கும் சிவகாமி அம்மன் கோயிலுக்கும் இப்போது அக்காணியில் எம்மால் புதிதாகத் தாபிக்கப்பட்ட மகாவிஷ்ணுமூர்த்தி கோயிலுக்கும் நித்திய பூசை அபிஷேகம் உற்சவம் ஆகியவைகளைச் செய்விக்க தரும சாதனம் செய்யப்பட்டுள்ளது மழவராயர், கந்தையா, கந்தையா வள்ளிநாயகம் கந்தையா பசுங்கிளி, குமாரசாமி சின்னத்தங்கம் என வேறு பலரும் செய்த தர்ம சாதனங்களும் ஏன் முன்னர் இருபந்திகளிலும் குறிப்பிடப்பட்டவர்களின் தர்ம சாதனங்களும் அடங்கும்.

தரும சாதனம் செய்யப்பட்ட காணிகள் வருமானம் வராவிட்டாலும் சிறுப்பிட்டி வல்லயப்புலம் ஸ்ரீகருணா கடாசஷியாகிய சிவகாமி அம்மன் தொடக்கம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரை பக்தர்கள் மனதில் நிறைந்து நிற்கும் எம்பெருமாட்டி திருவுருவம் கனவிலும் நனவிலும் பல அற்புதங்களைக் காட்டி வருகின்றது.

ஆதியில் செட்டிகமம் எனப்படும் காணியில் எமது அம்மன் ஆலயத்து அருகில் காத்தவராயர் எனப்படும் காவல் தெய்வம் தான்தோன்றிக் கல்லாக இருந்து வந்தது. இன்றும் அக்கல்லே காத்தவராயர் கல் போற்றி பூசை வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தான்தோன்றிக் கல்லாக அமைந்த காத்தவராயருக்கு அக்கால பரம்பரையினர் பந்தர் அமைந்து பொங்கல் வழிபாடுகள் செய்து திராவிட முறைப்படி பூசாரியர் உரு ஏறி ஆட்டம் போட்டுக் குறிசொல்லி வழிபாடுகள் இயற்றி வந்தனர்.

இலங்கையை ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலத்தில் இப்பிரதேசத்தில் காத்தவராயரை வழிபாடு செய்யும் பரம்பரையில் ஒருவரை ஏதோ காரணத்துக்காக யாழ்ப்பாணத்துக்கிருந்த டச்சுக்காரரின் சேனாதிபதி கைது செய்து கொண்டு சென்று கோட்டைக்குள் அடைத்துவிட்டனர். பல மாதங்களாகியும் அவர் விடுதலை செய்யப்படவில்லை. அவரை விடுவிப்பதற்கு பல முயற்சிகள் சிறுப்பிட்டி புத்தூர் பகுதிகளைச் சேர்ந்த பெரியவர்களால் மேற்கொள்ளப்பட்டது. எதுவும் பயனற்று மாதங்கள் வருடங்கள் ஆகின.

சில வருடத்தின் பின் காத்தவராயரில் உருவேறி குறி சொல்லும் பூசாரி வரும் புதுவருடத்தில் கோவில் பூசை வழிபாடுகளில் அவர் இங்கு வந்து சேர்வார் என்று குறி சொன்னார். என்ன ஆச்சரியம்! புது வருட பொங்கல் பூசைகள் நடைபெறுகின்ற தினத்தன்றே அவர் குறிப்பிட்ட வாறு வந்து சேர்ந்து பூசை வழிபாடுகளிலும் கலந்து கொண்டதாக கர்ண பரம்பரைக் கதைகள் மூலம் அறியக் கிடக்கின்றது.

இப்பிரதேசத்தில் காத்தவராயன் கூத்துக்கள் எனப்படும் நாட்டார் கூத்துக்கள் கோவில் விழாக் காலங்களில் இரவிரவாக ஆடப்பட்டும் நாட்டார் இசைமெட்டில் பாடப்பட்டும் வருகின்றது.

புத்தூர் கோவிற்பற்றைச் சேர்ந்த வாதரவத்தை எனும் கிராமத்தில் காத்தவராயனின் சகோதரனான பப்பரவாயன் கூத்து ஒரு காலத்தில் பேர் பெற்று இருந்தது. யாழ்ப்பாணத்திற்கு பழைய பிரதமர் கொத்தலாவல (ஐ.தே.க) சமூகமளித்த போது இக்கூத்து ஆடிக் காண்பிக்கப் பெற்று அவரது பாராட்டுதலைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

அற்புதங்கள் நிறைந்த காத்தவராயர் அம்மன் ஆகிய தெய்வங்களை வேண்டி விரதமிருந்து நோத்திக்கடன் வைத்து இக்கூத்துக்களை ஆடுவதே அக்கால மரபாக இருந்திருக்கிறது. அடுத்த தொரு காலகட்டத்தில் கூத்துக்களுக்குப் பதிலாக கோவில் திருவிழா காலங்களில்மேளக் கச்சேரி சின்னமேளம் எனப்படும் சதுர்க்கச்சேரி வில்லுப்பாட்டு பாட்டுக்கோஷ்டிகள் என்பன வளர்ந்து வந்தன மிக சமீப காலமாகப் பட்டிமன்றம், கவியரங்கள், சொற்பொழிவுகள் என்பவையும் அறிமுகமாகின. பட்டிமன்றம் முதலியன நாயன்மார் காலத்திருந்ததாகவும் புராணங்கள் கூறும்.

சிறுப்பிட்டி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ காலங்களில் சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த சந்நாசி என அழைக்கப்படும் சிவனடியார் கண்ணகி நாட்டுக்கூத்து இசை நாடகம் ஆகியவற்றை மேடையேற்றியது இன்றும் ஞாபகம் வருகிறது. அச்சுவேலியூர் கலாபூஷணம் சின்னமணியின் நண்பரான சந்நாசி அவரது வில்லிசை நிகழ்வுகளையும் மேடையேற்றத் தவறியதில்லை.

இலங்கையை ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலத்திலிருந்து வளம் கொழிக்கும் வல்லையப்புலம் பூமியில் காத்தவராயரும் அதன் அருகே மூல தெய்வமாகிய அம்பிகை ஆலயமும் பரம்பரைகளாக இருந்து வந்திருக்கின்றது.

காத்தவராயர் ஆலயம் தற்போது திரு இளையதம்பி பாலசுப்பியமணியத்தின் உபயத்தில் வருடாந்த பொங்கல் மடை நிகழ்வுகள் (வயிரவமடை) வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.. இவரது முந்திய பரம்பரையினரே இதற்கு உரித்தானவர்கள். 1991ல் எனது பரிபாலன சபையினர் நடாத்திய கும்பாபிஷேகத்தின் போதும், அதற்கு முதல் செய்த புனருத்தாரண வேலைகளின் போதும் இவ் ஆலயத்திற்கான செலவுகளை அவர்களே ஏற்றுக்கொண்டனர்.

மூல தெய்வமான அம்பிகை ஆலயமும் புராதன வரலாறு கொண்டது. அது எப்போது யாரால் முதல் முதல் கட்டப்பட்டதென்பதை அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது.

அமரர் ஸ்ரீமான் வேலுப்பிள்ளை கனகசபை அவர்களின் முன்னோர்களே அம்மன் ஆலயத்தைப் பராமரித்து வந்தனர். அமரர் வே. கனகசபை புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரியில் ஆசிரியராகப் பிரதி அதிபராக 1966ம் ஆண்டில் காலமாகும் வரை கடமை புரிந்தவர்.

அவரது மருமகன் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய தெல்லிப்பழை கொல்லன்கலட்டியைச் சேர்ந்த திரு.சு. கனகராசா இன்று எமது பரிபாலன சபையின் பொருளாளராகப் நற்பணி புரிந்து வருகின்றார்.

11.09.1991இல் இதற்கு முதல் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அப்போதிருந்த ஒரு தளத்தூபி இடிக்கப்பட்டிருந்த துவி தளமாக கட்டப்பட்டது. அப்போது மூலஸ்தான அடித்தளம் இடிக்கப்படவில்லை. ஆனால் 2009இல் மூலஸ்தான கருவறையின் அடித்தளம் கிளறப்பட்டு திரும்பக் கட்டப்பட வேண்டுமெனவும், ஆல் அரச மரவேர்கள் சென்றுவிட்டன என்றும் கூறப்பட்டது. அத்திவாரமும் கிளறப்பட்டு மூலஸ்தான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது மூலஸ்தானம் திரும்பக் கட்டுவதற்கான செலவையும் தூபி திரிதளமாகக் கட்டுவதற்கான செலவையும், மகா மண்டபம் வில்லுப் பண்டிகை போடுதற்கான செலவையும் திருமதி இளையதம்பி ஆச்சிப்பிள்ளை (கனடா) அவர்கள் மனம் உவந்து செய்தார். ஊரவர் அனைவரதும் உடல் நிதி உழைப்பும் பொது.

அம்பிகை ஆலயத்தின் பிற்பரிவாரமாக அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம் சின்னையா பூதத்தம்பியால் கட்டுவிக்கப்பட்டது. அதன் அருகே அமைந்துள்ள மகாவிஷ்ணு ஆலயம் பூதத்தம்பி சின்னாச்சிப்பிள்ளையால் கட்டுவிக்கப்பட்டது. கணவனும் மனைவியுமாக இரு கோயில்களையும் அமைத்து தரும சாதனங்கள் மூலம் அவற்றின் செயற்பாட்டுக்கு வழிவகுத்துள்ளனர். தரும சாதனங்கள் செவ்வனே நடைமுறைப் படுத்தபடாதது வருந்துதற்குரியது.

அடுத்து முருகனுக்கான ஒரு பரிவாரக் கோவில் புத்தூரைச் சேர்ந்த கொடை வள்ளல் அமரர் மழவராயர் கந்தையாவால் கட்டப்பட்டது. முருகன் இருக்கும் இடத்தில் பஞ்சலோகத்தால் வார்க்கப்பட்ட வேல் காட்சி தருகின்றது. கந்தபுராண படனம் வள்ளல் கந்தையரின் அறக்கட்டளை கள் மூலம் வருடாந்தம் நடைபெறவும் வழிசமைக்கப்பட்டது.

பின்னர் அமரர் மழவ கந்தையரின் பாரியாரான வள்ளிநாயகம் பசுங்கிளி என்பவர்களால் துர்க்கை அம்மனுக்கான ஒரு பரிவாரக் கோவில் கட்டுவிக்கப்பட்டது. இதன் மகா கும்பா பிஷேகத்தை அச்சுவேலி அமரர் குமாரசாமிக் குருக்கள் நடாத்தி வைத்ததாகவும் அறியக் கிடக் கின்றது.

காத்தவராயருக்கான ஆலயம் இரண்டாம் வீதியிலேயே அமைந்துள்ளது. இன்றும் காத்தவராயர் ஒரு தான்தோன்றிக் கல்லாகவே அமைந்துள்ளது.

2009ல் புனருத்தாரணத்துக்கான பாலஸ் தாபனம் செய்யப்படும் வரை வயிரவருக்கான பஞ்சலோக சூலமும், காத்தவராயரின் கோவிலிலேயே வைக்கப் பட்டிருந்தது இரு காவல் தெய்வங்களுக்கும் ஒரு சேரப் பூசை வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. காத்தவராயர் ஆலயத்திலேயே சந்தான கோபால விக்கிரகம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. வயிரவருக்கான தனி ஆலயம் கோயில் முன்புறத்தில் உரிய இடத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

அது போல சண்டேஸ்வரருக்கும் ஒரு தனி ஆலயமாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் வீதியில் இருந்து வந்த வசந்த மண்டபம் இடிக்கப்பட்டு, தற்போது அது புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. புதிய வசந்த மண்டபம் அமைப்பதற்கான உத்தேச செலவு ரூபா பதினைந்து லட்சத்தையும் திருமதி இளையதம்பி பாக்கியம் மனமுவந்து ஏற்றுள்ளார்.

புதியதொரு மணிக்கூட்டுக் கோபுரமும் கட்டப்பட்டுள்ளது.

# பரிபாலன சபை

பரிபாலன சபை ஒன்று நியமித்து அதன் மூலம் கோவில் வளர்ச்சிப் பணிகளை ஆற்ற வேண்டுமென்ற கருத்து 1980ம் ஆண்டுகளிலேயே தொடங்கப் பெற்றது. இதற்கமைய 24.09.1987இல் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது.

அதிலிருந்து பத்து பேர்கள் தெரியப்பட்டு ஆளுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் அன்பளிப்புச் செய்து ஒரு லட்சம் ரூபா வங்கியிலிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது தொடர்ந்து தர்ம கர்த்தாவாகவும் கோயில் முகாமையாளராகவும் "அம்மான்" என அன்போடு அழைக்கப்பட்ட அமரர் வே. கந்தையா 1982ல் பாலஸ் தாபனம் செய்து வைத்தார். பாலஸ் தாபனம் செய்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் திருப்பணி வேலைகள் செவ்வனே நிறைவேறாது இழுவல் நிலை காணப்பட்டது.

இக்காலப் பகுதியில் முகாமையாளருக்குதவியாக இருந்து பத்து பேர் கொண்ட சபையினர் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டதால் திரும்ப 1987ல் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. முழு கோவில் நிர்வாகமும் புனருத்தார பரிபாலன சபையே செய்வதற்கு முகாமையாளர் அமரர் வே. கந்தையா ஒப்புதல் அளித்தார். இதற்கு முக்கிய காரணம் அருகிலுள்ள செல்லப்பிள்ளையார் ஆலயமும் பரிபாலன சபையிடம் விடப்பட்டு துரித மாற்றங்கள் கண்டதேயாகும்.

1987ல் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபைத் தலைவராக தபாலதிபர் அமரர் போஸ் மாஸ்டர் வேலுப்பிள்ளையும் செயலாளராக இளைப்பாறிய அதிபர் செம்மலை திரு.ச. தங்கராசாவும், பொருளாளராக ஆசிரியர் திரு.செ.விசுவலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளர் திரு.ச.தங்கராசா கூட்டக் குறிப்புக்களை உடனடியாக இந்து கலாசார அமைச்சுக்கு அனுப்பி 24.09.1981 திகதியிலேயே இ.க.அ 6/3/J/S/26 என்ற இலக்கத்தில் பதிவு செய்தார். பலருக்கும் ஊக்கம் கொடுத்து வேலைகளைத் துரிதமாக்க உதவினார். 11.09.1991இல் மகாகும்பாபிஷேகம் செய்தது. புதிய சித்திரத் தேர் அமைத்தது, வடக்கு மண்டபத்துக்கு கொட்டகை அமைத்தது. தெற்கு, மேற்கு, வடக்கு வெளி மதிலும், உள்வீதித் தூண்களும் திருத்தி அமைக்கப்பட்டன. முதலியன பரிபாலன சபையின் சாதனைகளாகும்.

# உபவிதி

11.09.1991இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்திலன்று பிற்பகல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பரிபாலன சபையின் நடைமுறைகள் குறித்த உபவிதி சபையில் வாசித்து ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுத் தலைவர் திரு.ச. தங்கராசாவாலும் செயலாளர் திரு. செ. விசுவலிங்கத்தாலும் ஒப்பமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**1987 தொடக்கம் பரிபாலன சபையின் சாதனைகள்**

1. பரிபாலன சபை இந்து கலாசார அமைச்சில் பதிவு செய்யப்பட்டது.
   இ. க. அ. 6/ 3/ J/ S/ 26 – 24.09.1981
2. பரிபாலன சபைக்குரிய புதிய யாப்பு எழுதப்பட்டு 11.09.1991ல் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.
3. 11.09.1991ல் மகா கும்பாபிஷேகம்
4. 1987 – 1991 காலப்பகுதியில் புனருத்தாரணம்

- மூலத்தானதூபி இடிக்கப்பட்டு திரிதளமாக்கப்பட்டது.
- கோவில் கொட்டகை கூரை வேலைகள் திருத்தம்
- மகாமண்டபம் தரிசன மண்டபம் கொங்கிறீற் கட்டடமாக்கப்பட்டது.
- கோவில் மடம் கூரை வேலைத் திருத்தமும், வெள்ளை அடித்தலும்
- வடக்கு மண்டபம் போட்டது.
- 1991 மகா கும்பாபிஷேக மலர்

5. தேர்த் திருப்பணி
   - புதிய சித்திரத்தேர் அமைந்தது
   - அதற்கான தற்காலிக கொட்டகைகள்
   - தேர் ஓடும் வீதி போட்டது.
   - தேர் சிறப்பு மலர்
   - நிரந்தர கொட்டகை அமைத்தது.
   - தூண் வேலை கொங்கிறீற் தீராந்தி தாங்கி கொட்டகை
   - புதிய சுற்று மதில்
6. 2009 – 2011 புனருத்தாரண பாலஸ்தாபனம்
   - மூலஸ்தானம் திரும்ப அத்திவாரத்திலிருந்து கட்டியது.
   - திரிதளம் தூபி நிர்மாணம், பொம்மைகள் நிர்மாணம்
   - மகா மண்டபம் தரிசன மண்டபம் பிளாற் அமைத்தமை
   - கொடித்தம்ப மண்டபம்
   - கூரைத்தாங்கு வில்லு வளைவுகள்
   - புதிய வேலைப்பாட்டுத் தூண்கள்
   - புதிய வசந்தமண்டபம்
   - புதிய யாகசாலை
   - வயிரவர் சண்டேஸ்வரி உப ஆலயங்கள்
   - மணிக்கூட்டுக் கோபுரம்
   - வெளிமண்டபம்
   - குருக்கள் குடியிருப்பு
7. 02.09.2011ல் மகா கும்பாபிஷேகம்

## ஆலய பரிபாலனசபை யாப்பு விதிகளின் சுருக்கம்

### பெயர்

இச்சபை சிறுப்பிட்டி மத்தி அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை எனப்பெயர் பெறும்.

### அம்மனின் மறுநாமங்கள்

01. ஸ்ரீகருணைகாடாச்சி அம்பாள் ஊஞ்சற் பாவில்
02. சிவகாமி அம்பாள் காணி உறுதிகளில்
03. இராஜ இராஜேஸ்வரி அம்பாள் பஞ்சாங்கத்தில்

விலாசம் :- கிறியப்பை சிறுப்பிட்டி மத்தி நீர்வேலி

**நோக்கங்கள் :-**

01. ஆலய வழிபாட்டாளர்கள் நன்மை கருதி நித்திய நைமித்திய பூசைகள் உற்சவங்களைச் சிறப்புற நடாத்தி ஆலயத்தினை அபிவிருத்தி செய்தல்.
02. ஆலயத்தின் அசையும் அசையாச் சொத்துக்களை நல்ல முறையிற் பேணிப் பாதுகாத்தல்.
03. இந்து சமய சம்பந்தமான அபிவிருத்திகள் மேற்கொள்ளல்.
04. ஆலயத்தின் திருத்த வேலைகளைத் திட்டமிட்டு செயற்படுத்துதல்.

**ஆலய பரிபாலனம்:-**

யாப்பு விதிகட்கமைய வருடாந்தம் பொதுச் சபை அங்கத்தவரால் தெரிவு செய்யப்படும்.

**பரிபாலன சபையின் பொறுப்பில் இருக்கும். அங்கத்துவம் :-**

இவ் ஆலயத்தின் வருடாந்த திருவிழா உபயகாரர் மாதாந்த பூசைக்காரர் நவராத்திரி, திருவெம்பாவை உபயகாரர் உட்பட கோவில் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ளும் சைவ ஆசார சீலர்கள்.

**நிர்வாக சபை:-**

பதினைந்து முதல் இருபது உறுப்பினர்கள் கொண்டது. திருவிழா உபயகாரர் பன்னிரண்டு பேரும் அடங்குவர். மீதிப்பேர் மாதாந்த பூசைக்காரர் 02 நவராத்திரி உபயகாரர், 02 திருவெம்பாவை உபயகாரர் 02 வழிபடுவோர் சார்பில் 01 என்ற ரீதியில் தெரிவு செய்யப்படுவர்.

**நிறைவேற்றுச் சபை:-**

தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர் நிர்வாக சபையிலிருந்து மேலும் இருவர். மொத்தம் ஏழு பேர்.

**பொதுக்கூட்டடம் :-**

வருடாந்தம் ஆண்டுப் பொதுக் கூட்டம் சித்திரை மாதத்துப் பூரணை தினத்தில் நடைபெறும். செயலாளர் அதற்கு ஏழு நாட்களுக்கு முன் அங்கத்தவர்கட்கு விளம்பரம் அனுப்புவார், பொருளாளர் எண் பார்வையிடப்பட்ட வருடக் கணக்கறிக்கையை நிர்வாக சபைக் கூட்ட அங்கீகாரத் தோடு பொதுச் சபை உறுப்பினர் பார்வைக்கு விளம்பரப்படுத்துவார். நிதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னரே புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறும்.

சாதாரண பொதுக் கூட்டங்கள் தேவையைப் பொறுத்து தலைவர் செயலாளரால் அழைக்கப்படும்.

**கணக்குப் பரிசோதகர்:-**

வருடாந்த பொதுக் கூட்டத்தில் நிர்வாக சபை உறுப்பினர் அல்லாத கணக்குப் பரிசீலிக்கும் தகமையுடையவர் ஒருவர் கணக்குப் பரிசோதகராக தெரிவு செய்யப்படுவார். நிர்வாக சபைக் கூட்டம் மாதாந்தம் பூரணைத் தின அபிஷேகம் பூசையைத் தொடர்ந்து கூட்டப்படும்.

செ. விசுவலிங்கம்
செயலாளர் கையொப்பம்

ச. தங்கராசா
தலைவர் கையொப்பம்

# புதிய சித்திரத்தேர்

சிறுப்பிட்டி வல்லயப்புலம் சிவகாமி அம்மன் ஆலயத்தில் மிக நீண்ட காலமாக இருகட்டுத் தேர்கள் அமைந்திருந்தன. ஒன்று அம்மாளுக்குரிய பெரிய தேர், மற்றயது பிள்ளையாருக்குரிய சிறிய தேர்.

காலப் போக்கில் பிள்ளையாருக்குரிய சிறிய தேர் பழுதாகிக் கைவிடப்பட்டது. பிள்ளையார் வெளிவீதி வருவதும் நின்று போனது.

அம்மாளுக்குரிய கட்டுத்தேர் 1960ம் ஆண்டில் கயிலாய வாத்தியார் எனப்படும் வேலுப்பிள்ளை கனகசபையால் மீளப் புதிதாக ஆக்குவிக்கப்பட்டது. தேர்த்திருவிழா உபயகாரர் ஆகிய அவர் தனது தந்தை வழிப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வந்தார்.

கட்டுத்தேர் விடுவதற்கான கொட்டகைக்கு ஒரு கட்டிடம் அத்திவாரம் போடப்பட்ட நிலையில் மிக நீண்ட காலமாக 1995ல் புதிய கொட்டகை அமைக்கும் வரை தொடர்ந்திருந்தது. மிக நீண்ட தொரு காலப் பகுதியில் கிடுகுகளால் வேயப்பட்டிருந்த கட்டுத்தேர் பழுதான நிலையை அடைந்தது.

இந்நிலையில் 1990களில் புதியதொரு சித்திரத்தேர் அம்பிகைக்கு அமைக்கப்பட வேண்டு மென்ற எண்ணம் பக்தர் மனங்களில் ஏற்பட்டது இதற்கு அம்பிகையின் திருவருளும் கைகூடியது.

சிறுப்பிட்டியின் சீர்மிகு வயல் தோட்டச் சீமையிலே கருணாகடாட்சியாகக் குடிகொண்ட சிவகாமி அம்மன் அருளால் பப்பர் என்னும் பொ. கனகநாயகத்தின் கனவிலும் நனவிலும் எம்பெருமாட்டி அருள் செய்தாள். கண்ணுக்கினிய காட்சிகள் நிறைந்த இளம் சிற்பக் கலைஞர் பாலச்சந்திரர் குழுவினரின் ஆக்கத்தில் அமைந்த புதிய சித்திரத்தேர் கண்கொள்ளாக் கவினுறு காட்சி தந்தது.

1994 ஆவணித் தேர்த் திருவிழாவின் போது கால்கோளிடப்பட்டு வேலைகள் துரித கதியில் நடைபெற்று 30.07.1995ல் வெள்ளோட்ட விழா நடைபெற அம்பிகை அருள் பாலித்தாள். திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், தெல்லிப்பளை துர்க்கா துரந்தரி அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

தேர்த் திருப்பணிச் சபைத் தலைவராக ஆசிரியர் திரு.ச. தங்கராசாவும் செயலாளராக ஆசிரியர் திரு.செ.விசுவலிங்கமும் பொருளாளராக ஆசிரியர் வே.பரிமேலழகபிள்ளையும் கடமை புரிந்தனர். 'பப்பருடன்' தொடர்புகொண்டு இணைப்பாளராகப் பணிகள் பல செய்த ஆசிரியர் அமரர் என்.எஸ்.கந்தையா அவர்களின் சேவையும் மகத்தானது.

புதியதொரு சித்திரத் தேர் அமைக்கப் பணஉதவி ரூபா பதினைந்து லட்சம் அனுப்பிய 'பப்பு' என்னும் அன்புக்குரிய பொ. கனகநாயகம் அவர்களே சித்திரத் தேர் விடுவதற்கான புதிய தேர் கொட்டகையையும் அமைத்து தந்து செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது என்பதற்கு இலக்கியமாகி நிற்கிறார். புதியதொரு சித்திரத்தேர், தேர்க் கொட்டகை அமைப்பதற்கு அம்பிகை அடியார்களின் அன்பளிப்பும், பங்களிப்பும், பப்பர் அனுப்பிய பெருந்தொகை நிதியும் உதவியது.

# அற்புதங்கள்

அற்புதங்கள் பல நிறைந்தது நமது சிறுப்பிட்டி வல்லயப்புலம் ஸ்ரீகருணா கடாட்சியாகிய சிவகாமியம்மன் ஆலயம். இவ் ஆலயம் தொடங்கப் பெற்ற காலத்திலிருந்து இன்று வரை பக்தர்கள் மனதில் நிறைந்து நிற்கும் எம்பெருமாட்டி திருவுருவம் கனவிலும் நனவிலும் பல அற்புதங்களைக் காட்டி வருகின்றது.

ஆதியில் எமது அம்மன் ஆலயம் இருந்த இடத்தில் காத்தவராயர் எனப்படும் காவல் தெய்வம் தான்தோன்றீஸ்வரராக தோன்றி ஆதரிக்கப்பட்டு வந்ததும் ஒல்லாந்தரால் கைது செய்யப் பட்ட இவ்வூர் பிரமுகர் சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்ததும் கோவில் வரலாற்றில் கூறியிருந்தோம். காத்தவராயராலும் காத்தவராயர் தாயான அம்பிகையாலும் காப்பாற்றப்பட்டு பொங்கல் பூசை வழிபாடுகளில் சிறையிலிருந்தவர் வந்து கலந்து கொண்டமை அற்புதமே.

சமீப கால வரலாற்றில் கூறக்கூடிய அற்புதங்களும் உண்டு. 1994ல் மிகப் பெரும் முயற்சியில் உருவாக்கப்பட்டு 30.07.1995ல் வெள்ளோட்டத்தைத் தொடர்ந்து தேர்த் திருவிழா மகோற்சவமும் முடிந்த பின்னர் 1995ல் நவராத்திரி பூசைகளை அடுத்து ஊரில் உள்ள அனைவருமே தென்மராட்சி நோக்கி இடம் பெயரவேண்டிய அவலம் ஏற்பட்டது. அவ்வேளை எமது புதிய சித்திரத்தேரை அம்மாளே நீயே காப்பாற்றிக் கொள் என மனமுருகி வேண்டி நின்றோம்.

போர் உக்கிரமாக நடைபெற்ற வேளையில் ஏவப்பட்ட ஷெல்கள் தேரிலோ தேர் முட்டியிலோ விழவில்லை ஆலய முன் முற்றத்தில் வீதியில் விழுந்திருந்தன அம்பிகையின் ஆலயமும் சித்திரத் தேரும் அம்பிகையின் அற்புதத்தால் காப்பாற்றப்பட்டது போல சிறுப்பிட்டி வாழ் மக்களும் அம்பிகை அருளால் காப்பாற்றப்பட்டனர்.

# ஆலயத்தின் பழமையை எடுத்துக்காட்டும் சிறப்பம்சம்

இராமபிரான் இலங்கையைத் தரிசித்த வேளையில் இவ் ஆலயம் இருக்கும் இடத்திற்கும் வந்து தனது பாதச் சுவட்டினைப் பதித்ததாகக் கர்ணபரம்பரைக் கதைமூலம் அறியமுடிகிறது. அச்சிறப்பினை ஆராயும் இடத்து இவ்வாலயத்தின் அம்மன் வாசலின் தெற்குத் திசையில் உள்ள ஒரு கிழுவை மரத்தடியின் நிலத்தில் இராமபிரான் 'அம்பு' எய்து நீர் எடுத்து அருந்தியதாகவும் அதனால், 'தான்தோன்றிக் கிணறாக' உருவாகி இன்றும் ஆலயத்திற்குத் தேவையான நீரினைத் தரும் வற்றாத கிணறாக உள்ளமை சிறப்பு மிக்கதாகும். அத்துடன் இராமபிரான் இவ்விடத்திலிருந்து நிலாவரை நோக்கிச் செல்லும் போது இக்கோவிலுக்கு மேற்கே ஒரு சிறு தூரத்தில் உள்ள ஒற்றையடிப் பாதையில் ஒரு கல்லின் மேல் இராமபிரானின் பாதச்சுவடு பதியப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் கால முதிர்வினாலும், மூத்தோர்களால் பேணப்படாமையினாலும் தற்போது அப்பாதத்தினைக் காணமுடியாது உள்ளது.

மு. இராமநாதன்,<br>க. வல்லிபுரநாதன்

# ஆலய வெளி மண்டபம்

சிறுப்பிட்டி அம்மன் கோவிலுக்கு ஒரு வெளிமண்டபம் இல்லாதது நீண்டகாலக் குறையாக இருந்தது. 02.09.2011ல் நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தின் போது வெளிமண்டபத்தை அமைத்தே தீர்வது என்ற நிர்வாக உறுப்பினர்களின் கடும்

முயற்சியாலும் அம்பிகையின் அருளாலும் அது பூர்த்தியானது கண்டு பலரும் அகமகிழ்ந்து பாராட்டுகின்றனர்.

வெளிமண்டபத்தையும் அமையுங்கள், அதற்கும் நான் பணம் தருகின்றேன் என்று இளையதம்பி ஆச்சிப்பிள்ளை அம்மா கனடாவிலிருந்து அடிக்கடி கதைப்பார். ஊக்கம் கொடுப்பார். கனவுகளில் அம்பாள் வருவதாகக் கூறுவார். மகா கும்பாபிஷேகத்தின்போது நேரில் வந்து தரிசித்து அம்பாளே நேரில் வந்து பாராட்டியது போல அகமும் முகமும் மலரப் பாராட்டினார்.

வெளிமண்டபத்துக்காக பெயர் குறிப்பிட விரும்பாத வேறு அன்பர் குழு ஒன்றும் ரூபா இரண்டு லட்சத்து இருபத்தையாயிரம் தந்து உதவினார்கள்.

கருணா கடாட்சியம்மாள் அன்பர் நினைத்த நல்ல காரியங்களையெல்லாம் நடைமுறைப்படுத்தி கனவை நனவாக்கித் தந்துள்ளார்.

தன்னை ஆதரித்து அன்பு காட்டும் தொண்டர்களின் வாழ்வை உயர வைக்கும் அம்பிகையின் அற்புதங்களுக்கு வேறு உதாரணங்கள் தேடவே வேண்டாம்.

# உப ஆலயங்கள் / விக்கிரகங்கள்

## ஆலயத்துள் இருக்கும் சந்நிதிகள்

01. மூலஸ்தானம் அம்பிகை (கருங்கற்சிலை) தூபி
    மறுநாமங்கள்
    ஸ்ரீ கருணா கடாட்சியம்மன் ஊஞ்சற்பாட்டில்
    ஸ்ரீமனோன்மணி அம்மன் மந்திரத்தில்
    இராஜராஜேஸ்வரியம்மன் பஞ்சாங்கம்/கலண்டர்கள்
02. பிள்ளையார்....... (கருங்கற்சிலை) தூபி
03. மகாவிஷ்ணுமூர்த்திதேவியர் (கருங்கற்சிலை) தூபி
04. துர்க்கை கருங்கற்சிலை தூபி
05. வேல் (பஞ்சலோகம்) தூபி
06. காத்தவராயர் (தான்தோன்றிக்கல்) தூபி
07. வயிரவர் (பஞ்சலோக சூலமும் புதிய கருங்கற் சிலையும் தூபி
08. சந்தானகோபாலர் (பஞ்சலோகம்)
09. அட்டதிக்குபாலகர் (பஞ்சலோகம்)
10. சண்டேஸ்வரி

**எழுந்தருளி விக்கிரகங்கள்**

01. சிவகாமியம்மன் (சிறியது)
02. இராஜராஜேஸ்வரி / மனோன்மணி (பெரியது)
03. பிள்ளையார்
04. மகாவிஷ்ணு ஸ்ரீதேவி பூமிதேவியர் சகிதம்

**வாகனங்கள்**

01. இடபம்
02. சிங்கம்
03. குதிரை சிறியது வெள்ளை
04. குதிரை பெரியது சிவப்பு
05. எலி
06. பீடம்

# காணி உறுதிகள்

அம்பிகையை வழிபடும் சகலரும் அறிந்து கொள்வதற்காக காணி உறுதிகளின் உண்மை விபரங்களைக் கும்பாபிஷேக மலரில் வெளியிட வேண்டியது எமது பொறுப்பாகும். குறிப்புக்களுடன் அவை இங்கே தரப்படுகின்றது.

மூலஸ்தானத்தின் பின் உள்ள முதலாவது பரிவாரமூர்த்தியாகிய விக்கினேஸ்வரர் ஆலயத்தின் பேரில் தர்ம சாதனம் செய்யப்பட்ட உறுதி வாசகங்கள் வருமாறு.

1922ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி நொத்தாரிசு அ.க. சோமசுந்தரம் முகதாவில் 307ம் இலக்கத்தில் நிறைவேறிய தரும சாதன உறுதியால் புத்தூர் தெற்கைச் சேர்ந்த சின்னையா பூதத்தம்பி என்பவர் சிறுப்பிட்டி வல்லயப்புலம் என்னும் காணியில் எழுந்தருளியிருக்கும் சிவகாமியம்மன் கோவிலுக்கும், அக்கோவிலில் அவரால் கட்டுவிக்கப் பெற்ற விக்கினேஸ்வரர் கோவிலுக்கும் பின் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனங்களையும் அவற்றிற்குச் சேர்ந்தவைகளையும் தர்ம நன்கொடையாகக் கையளித்து குறித்த ஆதனங்களிலிருந்து கிடைக்கும் பிரயோசன வருமானங்களையெடுத்து குறித்த கோவில்களில் நித்திய நைமித்திய பூசைகளை கிரமங் தவறாது நடாத்துவித்து வருமாறு தனது தமையனார் மகன் புத்தூர் தெற்கு மயில்வாகனம் கந்தையாவை நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமித்து குறித்த மயில்வாகனம் கந்தையா சீவிய காலத்தின் பின் புத்தூர் தெற்கு மழவராயர் கந்தையாவையும் அவர் சந்ததியாளரையும் பராமரித்து வருமானங்களைக் குறித்த கோயில்களில் நித்திய நைமித்திய பூசைகளை கிரமந் தவறாது நடாத்து வித்து வரவேண்டுமென்றும் குறித்த சின்னையா பூதத்தம்பி தனது விருப்பத்தை வெளிப்படுத்தி யிருந்தார்.

குறிப்பு:- 11.09.1991 மகா கும்பாபிஷேகத்தின் பின்னர் பரிபாலன சபை நிர்வாகத்தில் மேற் குறிப் பிட்ட காணி வருமானங்கள் எதுவும் நித்திய பூசைச் செலவுக்கு வழங்கப்பட்டதாக இல்லை. ஆகக் குறைந்தது ஒரு மாதப் பூசையைக்கூட குறிப்பிட்ட தர்மகர்த்தா பரம்பரையினர் செய்யவில்லை இந்நிலையில் 2007ம் ஆண்டு வெளிப்படுத்தல் உறுதியில் மீண்டும் தாமே நித்திய பூசைகளைக் கவனிப்பதாக வெளிப்படுத்தியது நகைப்புக்குரியது.

ஆவணி மாதத்தில் வரும் விநாயக சதுர்த்தி மட்டுமே அவர்கள் செய்யும் ஒரே ஒரு நைமித்திய பூசையாகும். அதற்கு கூட சில ஆண்டுகளில் நிர்வாகம் முண்டுகொடுக்க வேண்டியும் இருந்தது. கும்பாபிஷேக, சங்காபிஷேக தினங்கள், மகோற்சவ கால நைமித்திய கிரியைகளில் பிள்ளையாருக்கான குறைந்தபட்ச நைமித்திய செலவுகள் தானும் இக்காணி வருமானத்திலிருந்து கிடைப்பதில்லை.

---

## தருமசாதனம்

முற்பதிவு : K 294/95 இல : 810/15-12-2004

**வல்லையபுலம் நிலப்பரப்பு 8 - குழி 5இல் அரைவாசி**

குமாரசாமி மகள் நந்தினி ஆகியவர் சிறுப்பிட்டி மத்தி கிறியப்பை அம்மன் கோவிலில் கொண்டுள்ள பக்தி விசுவாசம் காரணமாக பிற ஏதுக்கள் காரணமாகவும் தருமசாதனம் செய்துள்ளேன்.

# மகாவிக்ஷ்ணுமூர்த்தி கோவிலுக்கான தரும சாதனம்

1926ம் ஆண்டு சித்திரை மாதம் 04ம் திகதி நொத்தாரிசு அ.க. சோமசுந்தரம் முகதாவில் 2266ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட தரும சாதன உறுதியால் புத்தூர் தெற்கைச் சேர்ந்த பூதத்தம்பி கைம்பெண் சின்னாச்சிப்பிள்ளையும் பெரியதம்பி மகள் சின்னப்பிள்ளையும் சிறுப்பிட்டி வல்லயப்புலத் தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமியம்மன் கோவிலுக்கும் இப்போது அக்காணியிற் தானே எங்களில் 1ம் பேரால் (பூதத்தம்பி சின்னாச்சிப்பிள்ளை) புதிதாகத் தாபிக்கப்பட்ட மகாவிஷ்ணுமுர்த்தி கோவிலுக்கும் எழுதிக் கொடுக்கும் தரும சாதனமாவது.

குறித்த கோயில்களில் நாங்கள் கொண்ட பக்தி விசுவாசம் காரணமாக ரூபா 2500/= பெறுமதியான இதன் பின்னாற் காணும் ஆதனங்களையும், ரூபா 500/= பெறுமதியான பின்னாற் காட்டும் ஆபரணங்களையும், தட்டு முட்டுக்களையும் ஆக ரூபா 3000/= பெறுமதியான அசைவற்ற அசைவுள்ள ஆதனங்களையும் இத்தாற் குறித்த கோயில்கட்கு தரும சாதனமாகக் கொடுத்து கையளித்து ஒப்படைக்கின்றோம். (காணி விபரங்கள் பின்னால் இணைக்கப்பட்டுள்ளது)

அசைவுள்ள ஆதனங்களாவன:

| | |
|---|---|
| 01. பொற்குடையொன்று பெறுமதி | 55/= |
| 02. பொற் திருக்கோபுரம் | 45/= |
| 03. பொற்கிளி | 45/= |
| 04. பொன் கட்டிய ருத்திராட்ச மாலை | 65/= |
| 05. பொன் ஒட்டியாணம் | 55/= |
| 06. பொற் சங்கிலியும் பதக்கமும் | 125/= |
| 07. பொற் காற் கொலிசு | 1.30 |
| 08. பொற்சிங்க முகக்காப்பு 1 கோடி | 1.30 |
| 09. செம்புகள் 10 | 20/= |
| 10. சிறுகுத்துவிளக்குகள் 2 | 10/= |
| 11. சருவக்குடம் | 08/= |
| 12. தாம்பாளம் 2 | 12/= |
| மொத்தம் | 500/= |

(இது 1926ம் ஆண்டுப் பெறுமதி)

அவைகளின் பிரயோசன வருமானங்களையெடுத்து குறித்த கோயில்கட்கு பின்னாற் காட்டும் பிரகாரம் நித்திய பூசை அபிஷேகம். உற்சவம் ஆகியவைகளைச் செய்யவும் செய்விக்கவும் எங்களில் 1ம் பேரினது மருமகன் புத்தூர் தெற்கு அருணாசலம் கனகசபை முத்துக்குமாருவை நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் தருமகர்த்தாவாகவும் இத்தால் நியமிக்கிறோம். அவரின் பின் அவருடைய சந்ததியால் தலைமுறை தலைமுறை இத்தரும விசயத்தை நடாத்த வேண்டியது.

01. மேற்காட்டிய 8ம் ஆதனத்தின் பிரயோசன வருமானம் சொரியலான 4 பரப்பிலும் பிரயோசன வருமானங்களைக் கொண்டு குறித்த சிவகாமியம்மன் கோவிலுக்கு வருடம் தோறும் வரும் மார்கழி மாதம் முழுவதும் நித்திய பூசை செய்து வர வேண்டியது.

02. எஞ்சிய சகல ஆதனங்களின் பிரயோசன வருமானங்களைக் கொண்டு குறித்த மகாவிஷ்ணுமூர்த்தி கோவிலுக்கு வருடம் முழுமையும் நித்திய பூசையும் ஆவணி மாதத்தில் குறித்த கோயில் கும்பாபிஷேகமான தினத்தில் விஷேட அபிஷேகமும்

03. மார்கழி மாதத்தில் வரும் பூர்வபக்க ஏகாதசித் தினத்தில் விஷேட உற்சவமும் சுவாமி வீதியுலாவும் செய்து வரவேண்டியது.

04. மேற்குறித்த ஆபரணாதிகளையும் தட்டுமுட்டுக்களையும் இவரும் இவர் சந்ததியாரும் தங்கள் வசத்தே வைத்திருந்த சிவகாமியம்மன் கோயிலுக்கும் மகாவிஷ்ணுமூர்த்தி கோயிலுக்கும் விக்கினேஸ்வரர் கோவிலுக்கும் கொடுத்து வாங்க வேண்டியது.

குறிப்பு :-

11.09.1991ல் கும்பாபிஷேகம் செய்து பரிபாலன சபை நிர்வாகத்தில் மேற்குறிப்பிட்ட ஆபர ணாதிகளோ தட்டுமுட்டுக்களோ எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை. அதற்கு முந்திய காலத்திலும் மார்கழி ஏகாதசித் தினத்தில் சிறப்பு உற்சவம் நடைபெற்றதாக நாம் அறியவில்லை. இவ்வருமானங்களிலிருந்து மார்கழி மாசத்து பூசைகளோ நடைபெற்றதாக இல்லை. தற்போதும் மார்கழிமாதப் பூசை பரிபாலன சபையினர் ஏற்பாட்டில் திரு.க. மகாலிங்கம் செய்து வருகிறார்.

மார்கழி மாதத்து பூர்வபக்க ஏகாதசி சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் என்ற மகத்துவம் பெற்றது சில மகாவிஷ்ணுமூர்த்தி கோவில்களில் அன்றைய தினம் தேர் அல்லது தீர்த்தம் நடைபெறும். எமது சிவகாமியம்மன் கோவிலில் மகாவிஷ்ணு மூர்த்தி தேவியர் சகிதம் பிரதிஷ்டை செய்யப் பட்டிருந்தும் மிகச் சிறப்பான மகாவிஷ்ணு மூர்த்திக்கான எழுந்தருளி விக்கிரகங்கள் தேவியர் சகிதம் அமைக்கப்பட்டிருந்தும், அந்த திருவிழாச் செலவுகட்காக காணி பூமிகளை தருமசாதனம் செய்து நிபந்தம் எழுதப்பட்டிருந்தும் அவ்விழா நடாத்தப்படாமல் இருப்பது மிகவும் மனவருத்தத்திற்குரியது "யாரொடு நோகேன்? யார்கொடுத்துரைப்பேன் ஆண்ட நீ அருளிலையானால்?" என்ற மாணிக்கவாசக சுவாமிகளின் மணிவாசகமே ஞாபகத்துக்கு வருகின்றது. அன்றைய தினம் திருவாசகம் திருப்பாவை முற்றோதலையும் வைத்துத் திருமாலின் அபிஷேக ஆராதனை வீதியுலாக்களையும் வைக்கலாம்.

# குருமூர்த்திக் குருக்கள்

## (11.09.1991 மகாகும்பாபிஷேக மலரிலிருந்து தழுவல்)

ஒரு கோவிலின் சிறப்பு அக்கோவிலில் பூசை செய்யும் குருக்கள் கையிலும் தங்கியுள்ளதாகப் பொதுவாகப் பலதும் அறிந்த பெரியோர்கள் கூறுவார்கள். அதிலும் உண்மையுள்ளது. ஒரு பாடசாலையின் சிறப்புக்கு அப்பாடசாலை நிர்வாகத் தலைவரான அதிபர் தனது சிறப்பான ஆளுமைகளாலும் நிர்வாகத் திறன்களாலும் தன்னைச் சார்ந்த சமூகத்தை கவரும் பண்பு ஒழுக்கம் நேரத் தவறாமை செயற்படுதிறன் அனைத்தும் காரணங்களாக அமைவது போல கோயில் குருக்களும் தனது ஆளுமையாலும், அன்பும் பண்பும் நிறைந்த பேச்சாலும் செயற்பாடுகளாலும் நேரத் தவறாத பூசை ஒழுங்குகளாலும், ஒழுக்கத்தாலும் உயர்வடைந்து கோவில் சார்ந்த சமூகத்தின் மனக்கண்களில் உள்ளம் கவர் உத்தமராக உயர்வடைவார்.

முன் பின்னாக 1960ம் ஆண்டுகளில் ஏறத்தாழ முப்பதிற்கு மேற்பட்ட ஆண்டுகள் கோவில் தெற்கு வீதியில் அமைந்த குடியிருப்பில் தன் குடும்பத்துடன் வாழ்ந்து எல்லோர் மனங்களிலும் நீக்கமற நிறைந்து அமரத்துவம் அடைந்தவர் குருமூர்த்திக் குருக்கள்.

அளவான அழகான சரீரம் கண்களில் கருணை எப்போதும் சிரித்த முகம். அன்போடும் ஆதரவோடும் அனைவரையும் அரவணைத்துக் காரியங்களைச் சிறப்பாக நிறைவேற்றும் சாதுரியம் தனது சொந்தக் கோவிலாகக் கருதி ஒவ்வொரு செயற்பாட்டிலும் அக்கறையும் ஆர்வமும் தனது தனித்துவமான ஆளுமையுடன் தொழிற்பட்டு அனைவரையும் கட்டுப்படுத்தும் திறன்.

இது எல்லாக் குருக்கள்மாருக்கும் பொருந்தாது. அடுத்தடுத்து நித்திரை விழித்து திருவிழாக்களை தொடர்ச்சியாக நடாத்தும் வேளைகளில்கூட. அவர் கடுமையான வார்த்தைகளைப் பேசியது கிடையாது. சிறு அளவில்கூட கோபாவேசப்பட்டதை யாரும் பார்த்ததில்லை. பொல்லாதவர்களைக் கூட சபித்து பேசாத உத்தமர். "எல்லாம் அம்பாள் பாதத்திற்குச் சமர்ப்பணம்" என்பதே அவரது சித்தாந்தம்.

அக்காலகட்டத்தில் பேர்பெற்ற குருக்கள் மார்களில் ஒருவர் குருமூர்த்திக்குருக்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் கொடியேற்றத்திற்கு வருடா வருடம் அழைக்கப்பட்டு நல்ல வருமானத்துடன் திரும்ப வருவார். தான் உழைத்ததை தனக்கும் குடும்பத்திற்கும் என்று மட்டுப்படுத் தாமல் அம்பாள் பணிகட்கும் தன் குடியிருப்போடு சேர்ந்த மடத்தின் அன்னதான நிகழ்வுகட்கும் தாராளமாகச் செலவு செய்வார்.

அதனால் இன்றும் அவரது வாழ்வை அறிந்தவர்கள் குருமூர்த்திக் குருக்கள் கொடுத்த உணவு வகைகளை தாங்கள் வயிறார உண்டதை கதைகளாகச் சொல்லி நன்றி பாராட்டுவார்கள் அப்படி ஒரு குருக்களை இனிக் காணமுடியுமா என்று ஏங்குவார்கள்.

"மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்" என்று பெரியபுராணத்தில் பக்திச் சுவை நனிசொட்டப் பாடியவர் சேக்கிழார் சுவாமிகள். வயிறார உண்ட அந்த அடியார்களின் வாழ்த்தும், அம்பாளின் அருட்கடாட்சமும் குருமூர்த்திக் குருக்களில் சந்ததியினர் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை

வாழ்வில் உயர்த்தி இன்று கொழும்பிலும் வெளிநாடு களிலும் சிறந்த சைவப் பணியாற்றி வருகின்றனர்.

இவரது மகன் காமாட்சிக் குருக்கள் அவுஸ்திரேலியாவில் நீண்ட காலம் பணியாற்றி இன்று கொழும்பிலுள்ள பிரபல கோவிற் குருக்களாக சீரிய பணியாற்றுகின்றார்.

குருமூர்த்திக் குருக்கள் தாமிருந்த கோயிற் சூழலை இயற்கை வனப்புடன் வளப்படுத்து வதிலும் கவனம் செலுத்தினார். அருகிலும் வீதிகளிலும் அரசு, வேம்பு, ஆல் முதலிய மரங்களை உண்டாக்கி வளம் சேர்ந்தார். இன்று வானுற உயர்ந்துள்ள இந்த மரங்கள் அவரது புகழைக் கூறும். அவரது சூழலை வளமாக்கும் நற்பணியை நாமும் புரிந்து கோவிற் சுற்றாடலை சோலைவனமாக்குவதே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் வழியில் சரியைத் தொண்டும், பிராமணரான திருஞானசம்பந்தர் வழியில் கிரியைத் தொண்டும் செய்து அவர் காலத்து வாழ்ந்த மக்களின் உள்ளம் கவர் உத்தமராக வாழ்ந்த குருமூர்த்திக் குருக்கள் எச்சம் சிறப்புற அம்பிகையைப் பிரார்த்திப்போம்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலால்"

ச. தங்கராசா,
தலைவர் (1991)

# பப்பரைக் கருவியாக்கி அம்பிகை செய்த அற்புதம்

## (28.08.1995 தேர்த் திருப்பணி மலரிலிருந்து தழுவல்)

சிறுப்பிட்டியில் எல்லோராலும் பப்பர் எனச் செல்லமாக அழைக்கப்படும் பொன்னையா கனகநாயகம் சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீமனோன்மணியம்பாள் ஆலயத்தில் அளவில்லாத பக்தி கொண்டவர். ஐந்தாம் திருவிழா உபயத்தை இவரது பரம்பரையினர் செய்து வருகின்றனர்.

அம்பிகையின் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு பேரூக்கத்தோடு செயற்பட்டு அதற்குரிய முதல் நிர்வாசபை 1980இல் அமைத்து அதில் முக்கிய பங்கு ஆற்றியவர் பப்பர். அம்பிகை யின் ஆலயத்திற்குரிய மின்சார இணைப்பைக்கூட தானே முன்னின்று நடாத்தி அதில் பெருந் தொகையான பணத்தையும் செலவு செய்தவர். தன்னையொத்த இளைஞர்களையும் பெரியோர் களையும் ஊக்குவித்து அவர்களுக்கெல்லாம் முன் உதாரணமாக நின்று வேலைகளை உற்சாகப் படுத்தியவர்.

அம்பிகை மீது அவர் கொண்ட அபிமானத்தையும் ஆறாத பக்தியையும் அதற்குப் பரிசாக அம்பிகை கொடுத்த அருட்கடாட்சத்தை நினைக்கும் தோறும் மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து, எம் கைதான் தலை வைத்து கண்ணீர் ததும்பி வெதும்பி அம்பிகையை உள்ளம் போற்றுகின்றது.

ஆரம்பத்தில் தேர்த் திருப்பணியை தொடங்கும் ஆர்வத்தால் அன்பர்கள் தரும் மரங்களை தறித்து அரிந்து பலகைகளை அடுக்கி வைப்போம் என்று நினைத்தோம்.

வேலைகள் மந்த கதியில் நடைபெற்றன. அம்பிகையின் அருட்காட்சத்தால் அம்பிகை தொண்டர் சுவிஸ் நாட்டிலிருந்த பப்பரின் மனம் கனிந்து எமக்குத் தேவையான போது தேவையான பணம் கிடைத்த வண்ணமேயிருந்தது. இதனால் அம்பிகையின் தேர்த் திருப்பணி வேலைகளை துரிதமாக மேற்கொண்டு ஒரு வருட காலத் திற்குள் தேர்த் திருப்பணியைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலை ஏற்பட்டது.

சிறுப்பிட்டி மத்தியிலே கருணா கடாட்சியாக எம்மையெல்லாம் காக்கும் தேவி சீர்மிகு வயல் தோட்டச் சீமையிலே ஆமேயும் பொழில்சூழ் வல்லயப்புல வாழைத்தோட்டங்கள் மத்தியிலே குடியமர்ந்து இன்னருள் புரியும் சிவகாமி அம்பிகையின் பேரருளால் ஊர்மக்களின் வேம்பு, இலுப்பை மரங்களும் நிதி உதவிகளும் சேர பப்பர் என்னும் திருத்தொண்டனைப் பாத்திரமாக வைத்து எம்பெருமாட்டி எம் கண்ணுக்கினிய தேர் சித்திரத் தேர் முடிப்பதற்கான அற்புத அருளைத் தந்துள்ளான். தேரிற்கான நிரந்தர கொட்டகையும் அமைத்து மகிழ்ந்தோம்.

சீர்மேவு சிறுப்பிட்டியூர் வயல்தோட்டச் சீமையிலே
பேர்மேவு ஸ்ரீமனோன்மணி அம்பிகையாய் எழுந்தருளி
நீர்மேவு வேணியளின் இடப்பாகத்துறைபவளே புதிய
தேர் மேவி வீதியுலா வந்தருள்வாய் அம்பிகையே!
“செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது”

செ. விசுவலிங்கம்,
இளைப்பாறிய ஆசிரியர்.

# தேர்த் திருப்பணி செய்த கயிலாய வாத்தியார்
## (தேர்த் திருப்பணி மலரிலிருந்து 28.05.1995)

தேவஸ்தானங்களில் இறை பூசைக்காகவும் அது தொடர்பான திருப்பணி வேலைகட்காகவும் செய்யும் நல்வினைகள் சிவநல்வினை எனப்படும். சிறுப்பிட்டி வல்லயப்புலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்மன் ஆலயத்தின் ஆதீன கர்த்தா வேலுப்பிள்ளை கனகசபை என்னும் கயிலாய வாத்தியாராவார்.

அம்பிகை ஆலயத்தின் மூலஸ்தானத்தையும் தரிசன மண்டபத்தையும் கயிலாயர் கனகசபையும் அவர் மகன் வேலுப்பிள்ளையும் அமைத்து பரிபாலித்து வந்ததாக அறிகிறோம். சைவப் பெரியாரான வேலுப்பிள்ளை தனது நகைகளைக் கூட விற்று அம்பிகை காரியங்களை மேற்கொண்டதாய் அறிகிறோம். சைவப் பெரியாரான வேலுப்பிள்ளை இறக்க அவரது மூத்த மகனான வே.கனகசபை B.S.C. (முன்னாள் ஆசிரியர் அதிபர் யா/ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரி புத்தூர்) கோயிற் கைங்கரியங்களை ஏற்றுச் சிறப்பாகச் செய்து வந்தார்.

தந்தையாராகிய வேலுப்பிள்ளையின் காலத்தில் செய்யப்பட்ட கட்டுத்தேர் பாவனைக் குதவாத போது அமரர் வே. கனகசபை (கயிலாய வாத்தியார்) புதியதொரு கட்டுத்தேரினை 1960ம் ஆண்டுகளில் செய்து அம்பிகையின் தேர்திருவிழாக்களை மிகச் சிறப்பாகச் செய்து வந்தார். உண்மையில் இரு கட்டுத்தேர்களைச் செய்து

அம்பிகையின் தேர் திருவிழாக்களை இது வரையும் இன்னும் தொடர்ந்தும் சிறப்பாகச் செய்து வந்த செய்து வருகின்ற வேலுப்பிள்ளை குடும்பத்தவரின் சேவைகளை சிறுப்பிட்டி வாழ் சைவ உலகம் போற்ற வேண்டும். கர்ணா கடாட்சியான அம்பிகையின் பேரருளால் அப்பணி தொடர்ந்தும் சிறப்புற அமைய வேண்டும்.

சிறுப்பிட்டி அம்மன் கோவில் பற்றிய பழைய கால நினைவுகளை அசைபோட்டுப் பார்க்கும் அன்பர்கள் கயிலாய வாத்தியாரின் அடக்கமான எளிமையான தோற்றத்தையும் பெருங் குணங்களையும் நினைவு கூர்வர். கோயிலடியில் உரத்துப் பேசியறியாத உத்தமர் அவர். "நன்றே வரினும் தீதே விளைகினும் நானறிவ தொன்றேயுமில்லை" என வாழ்ந்து காட்டியவர்.

கொடியே இளவஞ்சிக்கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின்பரிமளமே பனிமாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற வம்மே
அடியே னிறந்திங்கிப் பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.

என அபிராமிப் பட்டர் பாடியது போல கயிலாய வாத்தியார் அம்பிகையின் பாதார விந்தங்களில் சங்கமமாகி இறவாத பேரின்பப் பெருவாழ்வு அடைந்தபின் கோயிற் பரிபாலனப் பொறுப்பை ஏற்று நடாத்தி வந்தவர் அவரது சகோதரர் வேலுப்பிள்ளை கந்தையா.

அமரர் வேலுப்பிள்ளை கந்தையா புத்தூர் கிராம சபையின் அங்கத்தவராகவும் இருந்தவர். அவரது காலத்திலும் ஒரு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு கோவிற் பணிகள் திருத்தமுறத் தொடர்ந்தன. வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் தானே சரியைத் தொண்டில் ஈடுபட்டு கோயில் கூட்டியும் கழுவியும் உடலை வருத்தியவர். 1965ம் ஆண்டிலிருந்து நீண்டதொரு காலப்பகுதியில் தர்மகர்த்தாவாகவிருந்து அம்மான் என்று செல்லமாக ஊரவர் அழைக்கும் அமரர் வே. கந்தையாவின் திருப்பணிகளும் போற்றுதற்குரியது.

**வே. பரிமேலழகபிள்ளை,**
**இளைப்பாறிய ஆசிரியர்.**

# உபயகாரர் விபரம்

*மாதப் பூசைகள்*

01. தை - திரு. பொ. கனகலிங்கம் சாமி
02. மாசி - திருமதி. ந. தங்கம்மா
03. பங்குனி - திருமதி. கு. சரோஜினிதேவி
04. சித்திரை - திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா
05. வைகாசி - திரு. செ. தவநாயகம்
06. ஆனி - திருமதி. தி. நாகேஸ்வரி
07. ஆடி - திரு. செ. விசுவலிங்கம்
08. ஆவணி - திரு. ச. சுரேஸ்குமார்
09. புரட்டாதி - திரு. மு. பொன்னம்பலம்
10. ஐப்பசி - திரு. ஆ. அருணாசலம்

11. கார்த்திகை - திரு. வே. பரிமேலழகபிள்ளை (N. S. K. சார்பில்)
12. மார்கழி - திரு. க. மகாலிங்கம்

*வருடாந்த திருவிழா*

01. கொடியேற்றம் - திருமதி. கு. சரோஜினிதேவி
02. திரு. க. வல்லிபுரநாதர்
03. திருமதி. N. S. கந்தையா
04. திரு. ஆ. குமாரசாமி (சிறுப்பிட்டி கிழக்கு உபயம்)
05. திரு. பொ. கனகலிங்கம்
06. திருமதி. மயில்வாகனம் (சிறுப்பிட்டி மேற்கு உபயம்)
07. திரு. க. சரவணமுத்து / திரு. மு. இராமநாதன் குடும்பம்
08. சிறுப்பிட்டி வடக்கு உபயம்
09. திருமதி இ. தனலட்சுமியம்மா குடும்பம்
10. திரு. சு. கனகராசா/ திரு. செ. தவநாயகம்
11. திரு. த. விசுவலிங்கம் - தீர்த்தம் கொடியிறக்கம் - க. குகதாசன் குடும்பம்
12. பூங்காவன பகல் அபிஷேகம் - சி. பாலசுப்பிரமணியம்
13. வயிரவ மடை - திரு. இ. பாலசுப்பிரமணியம்

பங்குனி உத்தரம் - திரு. பு. மழவராயர் (புத்தூர்)
ஆனி உத்தரம் - திருமதி. ப. பராசக்தி (புத்தூர்)
ஆவணி சதுர்த்தி - திரு. சு. ஸ்ரீகாந்தன் (புத்தூர்)
ஆடிப் பூரம் - திரு. த. சிவகுமாரன் (சிறுப்பிட்டி)
மாசி மகம் - திருமதி. சி. தங்கம்மா குடும்பம்

*நவராத்திரி*

01. செல்வி. ப. சிவலீலாதேவி (புத்தூர்)
02. திரு. க. நடேசபிள்ளை / திரு. செ. விசுவலிங்கம்
03. திரு. த. இராமநாதன்
04. திருமதி. கு. பராசக்தி
05. செல்வி. தேவி சரஸ்வதி ஆசிரியை
06. திரு. அ. தருமலிங்கம்
07. திரு. ப. குகதாசன் குடும்பம்
08. திருமதி. இ. தனலட்சுமியம்மா
09. திரு. க. மகாலிங்கம்
10. திரு. வே. கந்தசாமி

*மார்கழி திருவெம்பாவை*

01. திரு. திருநாவுக்கரசு
02. திரு. செ. தவநாயகம்
03. திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா
04. திருமதி. கு. பராசக்தி
05. திருமதி. தி. நாகேஸ்வரி
06. திரு. அ. தருமலிங்கம்
07. செல்வி. பொ. மனோன்மணி
08. திருமதி. இ. தனலட்சுமி
09. திரு. க. ஜெயபால கணேசன்
10. திரு. சி. சண்முகலிங்கம்

*பூரணை தினப் பூசைகள்*

| | |
|---|---|
| 01. தை | திரு. தா. நடராசா |
| 02. மாசி | திரு. சி. தயானந்தன் |
| 03. பங்குனி | திரு. பா. வசந்தன் |
| 04. சித்திரை | திரு. மு. இலங்காநாதன் |
| 05. வைகாசி | திரு. இ. பாலசுப்பிரமணியம் |
| 06. ஆனி | திருமதி. ஜெ. பிறேமலதா |
| 07. ஆடி | திரு. க. குணசங்கர் |
| 08. ஆவணி | திரு. சா. சுரேஷ் |
| 09. புரட்டாதி | திரு. அ. கனகசபை |
| 10. ஐப்பசி | திரு. வி. கோபலாகிருஷ்ணர் |
| 11. கார்த்திகை | திரு. அ. பொன்வாசன் |
| 12. மார்கழி | திரு. க. மகாலிங்கம் |

# குருக்கள் குடியிருப்பும் அன்னதான மடமும்

சிறுப்பிட்டி வல்லயப்புலம் கிறியப்பைப் பதியுறைகின்ற ஸ்ரீகருணை கடாட்சியாம் மனோன்மணி யம்மன் ஆலயத்தின் தெற்குப் புறமாக உள்ள குருக்கள் குடியிருப்பும் அன்னதான மடமும் பழைமையான வரலாறுடையது.

ஆலய வரலாற்றில் முன்னர் குறிப்பிட்டது போல 1922ம் ஆண்டு தை மாதம் 11ந் திகதி நொத்தாரிசு அ.க.சோமசுந்தரம் முகதாவில் 307ம் இலக்கத்தில் நிறைவேறிய தரும சாதன உறுதியால் புத்தூர் தெற்கைச் சேர்ந்த சின்னையா பூதத்தம்பி என்ற சைவப் பெரியார் மழவராயர் கந்தையாவுக்கும் முற்பட்டு அவரது அறக்கொடைகட்கும் வழிகாட்டியாயமைந்தவர் அமரர் சி. பூதத்தம்பி சிறுப்பிட்டி வல்லையப்புலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்மன் கோவிலுக்கும் அக்கோவிலில் அவரால்

கட்டுவிக்கப்பட்ட விக்கினேஸ்வரர் கோவிலுக்கும் நித்திய நைமித்திய பூசைகளை நடாத்துவதற்கு தர்ம நன்கொடை செய்துள்ளார்.

1926ம் ஆண்டு சித்திரை மாதம் 4ந் திகதி நொத்தாரிசு அ.க.சோமசுந்தரம் முகதாவில் 2266ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட தரும சாதன உறுதியில் புத்தூர் தெற்கைச் சேர்ந்த பூதத்தம்பி கைம்பெண் சின்னாச்சிப்பிள்ளையும், பெரியதம்பி மகள் சின்னப்பிள்ளையும், சிறுப்பிட்டி வல்லியப்புலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமியம்மன் கோவிலுக்கும் இப்போது அக்காணியிற் தானே எம்மால் புதிதாகத் தாபிக்கப்பட்ட மகாவிஷ்ணுமூர்த்தி கோயிலுக்கும் நித்தியபூசை அபிஷேகம் உற்சவம் ஆகியவைகளைச் செய்விக்கத் தரும சாதனம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இருதரும சாதன உறுதிகளின்படி விக்கினேஸ்வரர் திருமால் உபயகாரர்களாகிய மயில்வாகனம் கந்தையாவினாலேயே நாற்சாரம் வீடு போலமைக்கப்பட்ட அன்னதான மடம் அமைந்துள்ளது தங்களது உபயங்களின்போது அன்னதான மடமாகவும் தங்குவதற்கான இடமாகவும் இது அமைந்தது.

சோமசுந்தரக் குருக்கள் குருமூர்த்திக் குருக்கள் ஆகியோர் பின்னர் இதில் தங்கி கோயிற் குருக்கள் குடியிருப்பு ஆக இது மாறியது. இந்த மடத்திலான குடியிருப்பில் மிக நீண்ட காலம் இருந்த பெருமை குருமூர்த்திக் குருக்களுக்கே உரியது.

இக்குடியிருப்பை ஆதியில் அமைத்தவர் விக்கினேஸ்வரர் உப ஆலய கர்த்தா சின்னையா பூதத்தம்பியின் தமையனார் மகன் மயில்வாகனம் கந்தையா ஆவார். அவரே இம்மடத்தின் தாபகர் அவருக்கு சிறுப்பிட்டி வாழ் சைவ அபிமானிகள் என்றும் கடப்பாடுடையர்.

தொண்ணூறு ஆண்டுகள் கடந்த நிலையில் சுண்ணாம்புக் கட்டிடம் பராமரிப்பதில் சிரமமாக வும் குருக்கள்மார் விரும்பாத பழைய குடியிருப்பாகவும் இருந்ததால் புதியதொரு குடியிருப்பும் அன்னதான மடமும் வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டது.

எம்பெருமாட்டி கருணை கடாட்சியின் தூண்டுதலால் புதியதொரு குருக்கள் குடியிருப்பையும் அன்னதான மடத்தையும் அமைக்க வேண்டுமென்ற ஆவல் கனடாவில் வாழும் சிறுப்பிட்டி அம்பிகை அடியார் இளையதம்பி ஆச்சிப்பிள்ளையின் மனதில் ஏற்பட்டது.

அதனைச் செயற்படுத்துமாறு நிர்வாகசபையினருடன் தொடர்புகொண்டு ரூபா ஐந்து லட்சத்தை முதலில் அனுப்பி வைத்தார். தனது மருகர் திரு. ஆ. மு. இராஜகோபால் கனடாவிலிருந்து இங்கு வந்த சமயம் அதனையும் காத்தவராயர் உப ஆலயத்தையும் சிறப்புற அமைய ஆவன செய்யுமாறு வற்புறுத்தி அனுப்பி வைத்தார். எம்பெருமாட்டி திருவருளால் அக்கைங் கரியம் இனிது நிறைவேறியது.

இவர்கள் இருவர்க்கும் நாம் என்றும் நன்றி பாராட்ட வேண்டும்.

மடம் பற்றிய கட்டுரையில் வருங்காலத்து வரலாற்று ஆதாரமாக அமையப் போகும் 2011ம் ஆண்டின் கும்பாபிஷேகமலரில் அந்த மடத்தின் காணியையும் தெற்கே பிரதான பாதையுடன் இணைக்கும் ஒழுங்கையையும் பற்றி அவசியம் குறிப்பிடப்பட வேண்டும்.

எமது கோவில் மடத்தினூடாக கோவில் வீதி வரை வரும் பாதையை 1980ம் ஆண்டுகளில் தனியார் கைவசப்படுத்த முனைந்தபோது அதனைத் தடுத்து நிறுத்தி கற்கள் போட்டு வீதியாகச் செப்பனிடப்பட்ட பெருமை அக்கால இளைஞர்கட்குரியது எப்போதும் விழிப்புடனிருக்க வேண்டுமென் பதற்கு அது மிகச் சிறந்த உதாரணம்.

விழிப்பின்றித் தூங்கியதால் புத்தூர் கிராம சபையின் கீழ் பல சந்ததிகளாக இயங்கிய பொது நிறுவனமாகிய சிறுப்பிட்டிச் சந்தை மூடப்பட்டு தோம்பு உறுதிகளைக் காட்டித் தனியாக்கி கைமாற்றிய அவல நிலை ஏற்பட்டது.

இத்தகைய நிலை கோவிலின் அயலிலுள்ள காணிகட்கும் ஏற்படக்கூடாதென்ற நன்நோக்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. ஆ. சிவஞானசுந்தரம் இடைக்காடு என்பவர் மூலம் காணிகள் அளந்து படம் இலக்கம் 1187 ஆதாரமாக எமது கோவைகளில் வைத்துள்ளோம்.

இதனை அடிப்படையாகக் கொண்டு கோயில் உள்ள காணியின் மொத்தப் பரப்பு 54.06க்கு ஆட்சி உறுதி எழுதவும் முயற்சி மேற்கொண்டோம். சில விஷமிகளில் சிண்டு முடிதலில் இது கை கூடவில்லை.

எல்லாம் அம்பாள் அறிவாள். நரகமும் சொர்க்கமும் அவரவர் செயற்பாட்டிற் கேற்பவே கிடைக்கும்.

கோயில் பற்றிய தகவல்களை பொது மக்கள் அனைவரும் அறிந்து அதனைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொருத்தருக்கும் உண்டென்பதை தெளிவு படுத்துகிறோம்.

உ

சிறுப்பிட்டி வல்லையம்புலம்

## திருவருள்மிகு ஸ்ரீகருணாகடாக்ஷி மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்

### புனராவர்த்தன சம்புரோக்ஷண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

# மஹாயாக மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2011

***அம்பிகை அடியார்களே!***

ஸ்ரீ விராட் புருடனது இடைநாடி ஸ்தானமாகிய இலங்காபுரியில், காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி போன்று சிறுப்பிட்டி ஊரின் மத்தியிலே தென்னை, மா, பலா, வாழை, கமுகு போன்ற பசுஞ்சோலை நடுவே சகல ஆன்மாக்களுக்கும், ஜீவராசிகளுக்கும் தாம் அகப்படுதல் வேண்டும் என்னும் கருணையினால் உருவத்திருமேனி தாங்கி நூதன திரிதள சித்திர வர்ண விமானத்துடன் கூடிய இரத்தினகல்பித மந்திர சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அகிலாண்ட கோடி பிரமாண்டநாயகி ஸ்ரீ கருணாகடாக்ஷி மனோன்மணி அம்பாளுக்கும் விநாயகர், ஸ்ரீதேவி, பூமிதேவி சமே ஸ்ரீமந்நாராயணன், சித்ரவேலாயுதர், துர்க்காம்பிகை, வைரவர், காத்தவராயசுவாமி, சண்டிகேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிஉன்னத மஹாநாசியுடன் கூடிய வசந்தமண்டபம், மணிக்கோபுரம் என்பவற்றிற்கும் வேதாகம முறைப்படி மந்திரங்கள் ஓத ஆகுதி சொரிந்து, பௌராணிகர் பண் ஓத, ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான கர வருஷம் ஆவணி மாதம் 17ம் நாள் (02.09.2011) வெள்ளிக்கிழமை வளர்பஞ்சமித்திதியும், சுவாதி நட்சத்திரமும் பொருந்திய சுபதினத்தில் உதயம் 06.05 மணி முதல் 7.10 மணி வரையுள்ள சிம்ம லக்ன சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அந்நேரமும் அதற்கு முன்பாக நடைபெறும் சகல கிரியா காலங்களிலும் அடியார்கள் வந்து பங்குபற்றித் தரிசித்து எல்லாம் வல்ல மனோன்மணி அம்பாளின் இஷ்ட சித்திகளையும் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

## *கிரியாகால விபரம்*

### கர வருடம் ஆவணி மாதம் 15ம் நாள் (31.08.2011) புதன்கிழமை

உதயம் 6.05 மணி முதல் 7.05 மணிக்கு வரும் கோதூளிகா முகூர்த்தத்தில் கர்மாரம்பம், ஸ்ரீ விநாயகர் வழிபாடு, சிவாசார்யவர்ணம், பிராமணானுக்ஞை, தேவானுக்ஞை, திரவியசுத்தி, திரவ்வியயாகம், ஸ்ரீ கணபதிஹோமம், நவக்கிரஹஹோமம், கங்கா பூஜை, தீர்த்த சங்கிரகணம், சூர்யாக்கினி, சங்கிரகணம், தொடர்ந்து பிற்பகல் கிராம சாந்தி, பிரவேசபலி, திசாஹோமம், இரக்க்ஷோக்கினஹோமம், வாஸ்துசாந்தி, சாந்தி ஹோமம், மூர்த்திஹோமம், சம்ஹிதாஹோமம்.

மாலை 7.00 மணிக்கு விநாயகவழிபாடு, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பஸ்தாபனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை, கலாகர்ஷணம், கும்பம் யாகசாலா பிரவேசம், யாகபூஜை, அக்னிகார்யம், நவாக்னி விபஜனம், அஷ்டோத்தரசதஓமம், பூர்ணாகுதி, வேத, ஸ்தோத்திர, தேவார பாராயணம், பிரசாதம் வழங்கல்.

இரவு 9.00 மணிக்கு மேல் ஸ்தூபி ஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம்.

நள்ளிரவு 12.00 – 1.00 மணி வரையுள்ள இடபலக்ன சுபமுகூர்த்தத்தில் பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்.

## கர வருடம் ஆவணி மாதம் 16ம் நாள் (01.09.2011) வியாழக்கிழமை

காலை 7.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல்.

காலை 8.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, விஷேட சந்தியாகபூஜை, ஸ்தாலீபாகம், பாவனாபிஷேகம், விஷேட திரவியஓமம், திரிசதிஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதக்ஷிண நமஸ்காரம், வேத, ஸ்தோத்திர, தேவார பாராயணம், இராக, தாள உபசாரம், விபூதி அருட்பிரசாதம் வழங்கல்.

மாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, விஷேட சந்தி, யாகபூஜை, பிம்பசுத்தி, ரட்சாபந்தனம், நியாசங்கள், தேவிகட்கமாலாஹோமம், பூர்வபச்சிம சந்தானம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்க்ஷிண நமஸ்காரம், வேத, ஸ்தோத்திர, தேவார பாராயணம், அருட்பிரசாதம் வழங்கல்.

## கர வருடம் ஆவணி மாதம் 17ம் நாள்(02.09.2011) வெள்ளிக்கிழமை

அதிகாலை 3.30 மணி முதல் விசேட சந்தி, விநாயகர் வழிபாடு, யாகசாலா பிரவேசம், யாகபூஜை, நவாக்னி பூஜை, ஹோமங்கள், பூர்ணாகுதி, அக்கினி சம்யோஜனம், மஹா பூர்ணாகுதி, விஷேட தீபாராதனை, பிரதட்சண நமஸ்கார வந்தனம், வேத, ஸ்தோத்திர, திருமுறை பாராயணம், ஸ்வஸ்தி வாசகம், அந்தர்பலி, பகிர்பலி, யாத்திராதானம், சகல சங்கு, நாத, மங்கள வாத்திய சகிதம் பிரதான கும்பங்கள் வீதிப்பிரதட்சணம், தூபி அபிஷேகம், கும்பம், மூலாலயப் பிரவேசம், கலாகர்ஷணம், ஆவாஹணம் தொடர்ந்து காலை 6.05 மணி முதல் 7.10 மணி வரையுள்ள சிம்ம லக்ன சுபமுகூர்த்தத்தில் கருணா கடாட்சிக்கும், ஏனைய பரிவார மூர்த்திகட்கும் மஹா கும்பாபிஷேகம், மஹாஹவிர் நிவேதனம், ஸ்திராகுதி, கர்ப்பாவரண அபிஷேகம், எஜமான் அபிஷேகம், அங்குரவிசர்சனம், தசதர்சனம், சிவாசார்யார்கள் சம்பாவனை உபசாரம், ஆசீர்வாதம், ஆசியுரைகள்.

பகல் 11.00 மணிக்கு மஹா அபிஷேகம், பூஜைகள், விபூதிப்பிரசாதம் வழங்கல்.

மாலை 7.00 மணி விஷேட பூஜைகள், திருவூஞ்சல், அம்பாள் பூந்தண்டிகையில் வீதிப்பிரதட்சணம்.

# பெயர் வரலாறு

## கருணா கடாசஷி ஸ்ரீ மனோன்மணி அம்பாள்

சிறுப்பிட்டி வல்லையப்புலம் கிறியப்பை கருணா கடாட்சியாக விளங்கும் ஸ்ரீமனோன்மணி அம்பாள் காலத்துக்கு காலம் பலவித பெயர்களில் அழைக்கப்பட்டு வருகின்றாள்.

02.09.2011 மகாகும்பாபிஷேக தினத்தில் சமூகமளித்து உரையாற்றிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மனோன்மணி என்பதற்கு நல்ல விளக்கமளித்தார். மனத்தின் கண்மணி போல மணியின் ஒளிபோல மனத்து இருள் ஆகிய அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானம் தருகின்ற மெய்ப்பொருள் மனோன்மணி.

சிவனோடு கூடி சிறந்த மனம் நிறைந்த நல்வாழ்வு வாழ வழிகாட்டும் அம்பிகை ஒன்பது தினங்கள் சிவனைப் பிரிந்து தனியாக இருந்து அருள் சுரந்த தனிக்கோயில்களே மனோன்மணி ஆலயம் ஆகும்.

## மனோன்மணி.

சக்தியின் முக்கிய மூர்த்தங்களுள் ஒன்றான மனோன்மணி நான்கு கரங்களையும், மூன்று கண்களையும் உடையவளாக விளங்குவதுடன் ஜடா மகுடத்தை தரித்தவளாகவும் காணப்படுகின்றாள். இவளின் உள் வலதுகரமானது அபய முத்திரையாகவும் உள் இடது கரமானது வரத முத்திரையாகவும் அமைய வெளிவலது கரம் தாமரை மலரையும் இடது கரம் உருத்திராச மாலையும் கொண்டு விளங்கும். இவள் வெண்மை அல்லது செம்மை நிறம் உடையவள். குந்தளாகரமான மகுடம் அல்லது கூந்தலினால் அமைந்த மகுடத்தை உடையவள். மகுடத்தின் இடது பக்கத்திலே பிறைச்சந்திரன் அமைந்திருக்கும். இவளின் ஆடையானது வெண்பட்டால் ஆகியது.

மனோன்மணி காளை மாட்டின் முதுகின் மேல் அமர்ந்த வடிவமானது மூன்று நிலை பொருந்தியதாக அமையும். முற்கூறிய தோற்றமே முதலாவது நிலை எனலாம். இரண்டாவது வடிவமாக மடிக்கப்பட்ட நிலையில் வலது பாதமிருக்க குஞ்சிதமாக இடது பாதம் தொங்கும் நிலையாகும். நான்கு கரங்களிலும் உள் இடது கரமானது விருஷபத்தின் தலைமேல் ஊன்றிய நிலையிலிருக்க ஏனைய மூன்றும் உத்பலம், வரதம், அபயம் ஆகியவற்றை அடையாளங்களாக காட்டி நிற்கும். மூன்றாவது வகை, இரண்டாவது வடிவம் போன்றதாக இருந்த போதிலும் வெளிக்கரங்களில் இடது கரம் செந்தாமரையையும் வலது கரம் ஜபமணிமாலை தரிப்பதையும் காணலாம்.

கருணாகடாசஷி என்பது வடசொல். கருணை என்பதன் தமிழ்வடிவம் அருள், இரக்கம், அன்பு, கருணை என்பன அதன் பொருளாகும். கடாசஷி என்பது வழங்குபவள் அருள்பவள் என்ற பொருளில் வருகிறது. அருளை அள்ளி வழங்குகின்றவள் என்பது கருணாகடாசஷி என்பதன் பொருளாகும்.

கருணைகடாசஷி என்பதனை மனோன்மணி அம்பிகைக்கு கொடுக்கப்பட்ட அடைமொழியாகவும் கொள்ளலாம். சிறுப்பிட்டி வல்லையபுலம் அம்பாளுக்கு கொடுக்கப்பட்ட இயற்பெயர் ஆகவும் கொள்ளலாம்.

இயற்பெயராகக் கொள்ளப்படின் இதற்கான ஒரே ஆதாரம் கோவில் ஊஞ்சற்பா மட்டுமே. கோவில் மணியும் கனகசபை வேலுப்பிள்ளை கேட்டுக்கொண்டபடி சித்தார்த்தி வருடம் 1915 ஆவணியில் ஆவரங்கால் ஸ்ரீசு. அம்பலவாணபிள்ளையால் பாடப்பட்டது. வேலுப்பிள்ளையின் காணிதோம்பு உறுதிகள் கிடைக்கவில்லை.

எழுந்தருளி விக்கிரகத்தின் பின்புறத்தில் மனோன்மணி என்ற குறிப்பும் குருக்கள் மந்திரத்தில் ஸ்ரீ மனோன்மணி என்ற குறிப்பும் உள்ளது. எமக்கு கிடைக்கக் கூடிய எழுத்து மூலமான ஒரே ஆதாரம் காணி உறுதிகளே.

1922ம் ஆண்டு தை மாதம் 11ந் தேதி நொந்தாரிசு அ. க சோமசுந்தரம் முகநூலில் சின்னையா பூதத்தம்பி என்பவரால் தர்மசாதனம் செய்யப்பட்ட காணி உறுதியில் சிறுப்பிட்டி வல்லையப்புலத்தில் எழுந்தருளியிருக்கும் **சிவகாமி அம்மன்** கோயிலுக்கும் எம்மால் தாபிக்கப்பட்ட விக்கினேஸ்வர மூர்த்தி உபஆலயத்திற்கும் எழுதிக் கொடுக்கும் தரும சாதனமாவது... என வரிகள் குறிப்பிடப்படுகிறது. எனவே சிறுப்பிட்டி சிவகாமி அம்மன் கோவில் எனவே உறுதிகளில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊஞ்சற்பாடல் ஒன்பதில் "சிவகாமியம்மையே ஆடீர் ஊஞ்சல்.." என்ற வரி குறிப்பிடத்தக்கது.

1950 – 1960 காலப்பகுதிகளில் ஆலய குருவாக இருந்த குருமூர்த்திக்குருக்கள் காலத்தில் வாக்கிய பஞ்சாங்கத்தில் வருடாந்த மகோற்சவ தினங்கள் அறிவிக்கும் போது சிறுப்பிட்டி இராஜராஜேஸ்வரி கொடி, இராஜராஜேஸ்வரி தேர், தீர்த்தம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே காலத்துக்கு காலம் இப்பெயர்களில் மாற்றங்களை அவதானிக்கலாம். தற்போதைய நிர்வாகசபை ஒரு போதும் எந்தப் பெயரையும் புதிதாகச் சூட்டவில்லை.

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.." என மாணிக்கவாசகர் கூறியது போல முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல் வேனை பக்திநெறி அறிவித்து இவற்றின் மெய்ப்பொருள் எதுவென மாணிக்கவாசகர் சிவனைச் சுட்டிக் காட்டியது போல நாமும் அம்பிகையே மெய்ப்பொருள் எனச்சுட்டிக் காட்டுகின்றோம் பெயருக்காக கட்சிகட்டுவது முத்திநெறி யறியாமூர்க்கர்களின் பக்தியற்ற அறிவீனம். ஆயிரம் நாமங்கள் கூறி சிவகாமியை அர்ச்சிக்கும் போது எல்லா நாமங்களையும் அவள் ஏற்றுக் கொள்கின்றாள். ஆனால் சந்தியின் ஆயிரம் திருநாமம் உள்ள புத்தகத்தில் கருணாகடாசஷி என்ற திருநாமம் இல்லை.

க. வல்லிபுரநாதர்<br>இளைப்பாறிய ஆசிரியர்.

# திருமுறைகளில் விநாயகர் பனுவல்கள்

எல்லாக்கிரியைகளிலும் தொடக்கத்தில் இடம்பெறும் விக்னேஸ்வர பூஜையின் போதும் கணபதி ஹோமம் முதலிய சிறப்பான விநாயக வழிபாடுகளின் போதும் பக்தியோடு ஓதவேண்டியவை

திருச்சிற்றம்பலம்

## முதலாம் திருமுறை

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## இரண்டாம் திருமுறை

கரியின் மாமுக முடைய கணபதி தாதைபல் பூதம்
திரிய இல்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்க ளேத்தும் ஒலிபுனற் காழிநன் னகரே

## நான்காம் திருமுறை

பலபல காமத்தராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி யென்னும் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை

## ஐந்தாம் திருமுறை

முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனின் தானோர் தலைமகன்
என்னை யாளு மிறையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே.

## ஆறாம் திருமுறை

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனை முன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்க மானார் போலும்
அடியேனை யாளுடைய அடிகள் தாமே.

## ஏழாம் திருமுறை

திங்கள் தங்கு சடையின் மேலார்
திரைகள் வந்து புரள வீசுங்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வாய்தி றவாள்
அங்கை வேலான் குமரன் பிள்ளை
தேவியார் கொற்றடி யார்
உங்க ளுட்க்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் றளியு ளீரே.

## ஒன்பதாம் திருமுறை

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவ சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரர்சே கரனே
நுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

## பதினோராம் திருமுறை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

## பன்னிரண்டாம் திருமுறை

மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

எடுக்கு மாக்கதை இன்றமிழ்ச் செயுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

திருச்சிற்றம்பலம்

## கிரியைகளின் போது ஓதத் தகுந்த (திருமுறையல்லாத) வேறும் சில விநாயகர் துதிப்பாடல்கள்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம் - நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய

## கோளறு திருப்பதிகம்

**நாள்கோள் தீமை ஏற்படாது தினமும் வழிபாடுகளின்போது ஓதத்தகுந்தது**

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே 1

என்பொடு கொம்போடாமை யிவைமார்பிலங்க
வெருதேறியேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடிவந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறு
முடனாயநாள் களவைதான்
அன்பொடுநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே 2

உருவளர் பவளமேனி யொளிநீறணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேன்
முருகலர் கொன்றை திங்கண் முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
றிருமகள் கலையதூர்தி சயமாதுபூமி
திசை தெய்வமானபலவு
மருநெறிநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே 3

மதிநுதன்மங்கையோடு வடபாலிருந்து
மறையோது மெங்கள் பரம
னதியோடு கொண்றைமாலை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
கொதியுறு காலனங்கி நமனோடுதூதர்
கொடுநோய்களான பலவு
மதிகுணநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே 4

நஞ்சணி கண்டனெந்தை மடவாடனோடு
விடையேறு நங்கள் பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையான பூதமவையு
மஞ்சிடுநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே 5

வாள்வரி யதளதாடை வரிகோவணத்தர்
மடவாளனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொண்றை நதிசூடிவந்தெ
னுளமே புகுந்தவதனால்
கோளரியுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
யாளரிநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே 6

செப்பிளமுலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வனடைவா
ரொப்பிளமதியுமப்பு முடிமேலணிந்தெ
